**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

தலைப்பு : முஸ்லிம்களின் எழுச்சியும், வீழ்ச்சியும்!

வரிசை : 761

இடம் : மஸ்ஜிதுத் தௌஹீத், நாகப்பட்டினம்

கதீப் : உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

நாள் : 07-01-2023 | 14-06-1444

بسم الله الرحمن الرحيم

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

கண்ணியத்திற்கும் மதிப்பிற்கும் உரிய பெரியோர்களே! சகோதரர்களே! மரியாதைக்குரிய தாய்மார்களே, சகோதரிகளே! அல்லாஹ்விற்கு முதலாவதாக நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

அல்லாஹுத்தஆலா அல்லாஹ்வுடைய அடியார்களாகிய உங்களோடு இந்த அமர்வில் உங்களை சந்திப்பதற்கு ஒரு பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, அல்லாஹுக்கே எல்லா புகழும் உண்டாகட்டுமாக. அல்லாஹ் சுபஹானஹுதஆலா நம்மை உயர்ந்த மிகச் சிறப்பான, மிகவும் கண்ணியத்திற்குரிய, சமுதாயமாக ஆக்கி இருக்கிறான்.

அல்லாஹ் சுபஹானஹுதஆலா ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள், நம்முடைய தலைவர் யார்? ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள், நம்முடைய இமாம் யார்? ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள்,

நம்முடைய வழிகாட்டி யார்? ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள், நம்முடைய முன்னோடி யார்? யாரை நாம் பின்பற்ற வேண்டுமோ அவர் யார்? ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள்.

அவர்களை அல்லாஹ் சுபஹானஹுதஆலா அனுப்பினான் எதற்காக? சூரா இப்ராஹிம் உடைய தொடக்க வசனத்தில் அல்லாஹுவதஆலா சொல்கிறான்.

لِتُخْرِجَ النَّاسَ مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ بِإِذْنِ رَبِّهِمْ إِلَى صِرَاطِ الْعَزِيزِ الْحَمِيدِ

மக்களை அவர்களுடைய இறைவனின் அனுமதியின்படி இருள்களிலிருந்து ஒளியின் பக்கம்; மிகைத்தவன், மகா புகழாளன் உடைய பாதையின் பக்கம் நீர் வெளியேற்றுவதற்காக இதை உமக்கு இறக்கி தந்தோம். (அல்குர்ஆன் 14 : 1)

எத்தகைய வசனம் பாருங்கள் நாம் சிந்திக்க வேண்டும். நபியே! இந்த வேதத்தை கொடுத்து நாம் உங்களை அனுப்பி இருக்கிறோம். ஏன் தெரியுமா? இருளுகளில் இருக்கக்கூடிய மக்களை வழிகேட்டில் இருக்கக்கூடிய மக்களை வெளிச்சத்தின் பக்கம் நீங்கள் கொண்டு வருவதற்காக அந்த வெளிச்சம் எது தெரியுமா? மிகைத்தவனாகிய, புகழுக்குரியவனாகிய

அந்த அல்லாஹ் யாருக்கு வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் உரிமையாக சொந்தமாக இருக்கின்றதோ அந்தப் பேரரசனுடைய பாதைக்கு நீங்கள் அழைத்து வருவதற்காக அவர்களை இருளில் இருந்து வெளியேற்றிக் கொண்டு வருவதற்காக இந்த வேதம் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

யார் இந்த இஸ்லாமை கிடைக்கப்பெற்றார்களோ, அவர்கள் அல்லாஹ்வுடைய ஒலி கிடைக்கப்பட்டவர்கள். இந்த வெளிச்சத்தால் என்ன செய்து விட முடியும்? இஸ்லாம் என்ற இந்த தீன் இந்த பாதை அல்லாஹ்வுடைய இந்த ரஹ்மத் இந்த நிஃமத் மிகப்பெரிய பாக்கியம் கிடைக்கப் பெற்றவர்கள் அல்லாஹ்வுடைய ஒளி கிடைக்க பெற்றவர்கள்.

يَهْدِى اللّٰهُ لِنُوْرِهٖ مَنْ يَّشَآءُ

அல்லாஹ், தனது (இஸ்லாம் எனும்) ஒளியின் பக்கம் தான் நாடியவர்களுக்கு நேர்வழி காட்டுகிறான் (அல்குர்ஆன் 24 : 35)

அல்லாஹ்வுடைய ஒளிக்கு அல்லாஹுத்தஆலா வழிகாட்டுகிறான் எது? அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்கு யாரை? அவன் விரும்புகின்றானோ? யாரை அவன் தேர்ந்தெடுக்கின்றானோ? யார் மீது விசேஷமான அன்பை அவன் பொழிய விரும்புகின்றானோ சகோதரர்களே! நீங்களும் நானும் அல்லாஹ்வுடைய இந்த விசேஷமா?

அன்புக்கு அருளானவர்கள், உரித்தானவர்கள், நினைத்துப் பாருங்கள் உலகத்தில் எது தவறினாலும் கவலை படாதீர்கள் அது அழிந்து போகக் கூடியது. உலகத்தில் உலக செல்வத்தில் எது கிடைக்கவில்லை என்றாலும் அதை நினைத்து வருத்தப்படாதீர்கள். அது எல்லாம் இல்லாமல் போகக் கூடியது.

كُلُّ شَىْءٍ هَالِكٌ اِلَّا وَجْهَهٗ

எல்லாப் பொருள்களும் அழியக்கூடியவையே, அவனது முகத்தைத் தவிர. (அல்குர்ஆன் : 28:88)

وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا

என்றென்றும் நிலையாக இருக்கக்கூடிய நற்செயல்கள்தான் உம் இறைவனிடம் (உங்களுக்கு) நன்மையாலும் சிறந்தவை; இன்னும், ஆசையாலும் சிறந்தவையாகும். (அல்குர்ஆன் : 18:46)

வசனத்தின் கருத்து: அல்லாஹ் சொல்கிறான் இந்த இஸ்லாம் இந்த மார்க்கம் இந்த தீனின் மூலமாக நீங்கள் செய்யக்கூடிய வணக்கவழிபாடுகள், உங்களுடைய தொழுகைகள்,நோன்பு, திக்ரு, துவா,

நீங்கள் இந்த தீனுக்காக படக்கூடிய சிரமங்கள், மஸ்ஜிதுக்கு வரும்போது சிரமம், மதரஸாவுக்கு ஓதப் போகும்போது உள்ள சிரமம், அல்லாஹ்வுடைய கல்வியை படிக்க வரும்போது சிரமம், இப்படி எந்த சிரமத்திற்கும் அல்லாஹுத்தஆலா உங்களுக்கு நற்கூலியை தருகிறான்.

நீங்கள் பள்ளிக்காக வரக்கூடிய ஒவ்வொரு எட்டுக்கும் அல்லாஹுத்தஆலா பாவங்களை மன்னிக்கின்றான், இதெல்லாம் ஹதீஸாகும் அந்தஸ்தை உயர்த்துகிறான்.

இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஜிகாதிருக்கு சொன்ன அனைத்து ஹதீஸ்களையும் தொழுகையின் பாடத்தில் கொண்டு
வருகிறார்கள்.

غَدْوَةٌ فِي سَبِيلِ اللَّهِ أَوْ رَوْحَةٌ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا عليها

அல்லாஹ்வின் பாதையில் காலையிலே செல்வது மாலையிலே செல்வது உலகம் உலகத்தை விட சிறந்ததாகும்.

அறிவிப்பாளர் : ஸஹ்ல் இப்னு ஸஃது ரழியல்லாஹு அன்ஹு, நூல் :புகாரி, எண் : 2892.

இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி தொழுகைக்கு வரக்கூடிய பாடத்திலே இதை பதிவு செய்கிறார்கள்.

இந்த தொழுகை ஒரு ஜிஹாதாகும். தொழுகைக்காக நீங்கள் எதிர்பார்த்து இருப்பது முஸ்லிம்களை எல்லையில் பாதுகாப்பதற்காக ஒரு உயிரை கொடுத்து 24 மணி நேரம் நின்று கொண்டிருக்கிறார்களே அந்த வீரர்கள். யார் தொழுகையை எதிர்பார்த்து இருக்கிறார்களோ! என்று அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்.

மக்களுக்கு அது புரியவில்லை மஸ்ஜிதுடைய அருள்,பாக்கியம் புரியவில்லை வணக்கவழிபாடுகளின் அருள்,பாக்கியம் புரியவில்லை மஸ்ஜிதில் இருக்கக்கூடிய நேரத்தை அவர்கள் சாதாரண ஒரு வீணான நேரமாக நினைக்கக்கூடிய மக்கள் எல்லாம் இன்று இருக்கிறார்கள்.

தாமதமாக வருவது விரைவாக ஓடுவது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஜிஹாதை பற்றி கேட்கும் போது சொன்னார்கள். ஒரு தொழுகைக்குப் பிறகு இன்னொரு தொழுகையை எதிர்பார்த்து இருப்பது.

இது தான் ரிபாத் ஆகும் முஸ்லிம்களின் நாட்டை எல்லையிலிருந்து பாதுகாப்பதாகும் என்று சொன்னார்கள். அல்லாஹ் மலக்குகளை அனுப்பி அவர் மீது ஸலவாத்து சொல்லும் படியாக வைக்கிறான். அவருடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அவருக்காக மலக்குகள் உட்கார்ந்து கொண்டு. யா! அல்லாஹ் இவரை மன்னிப்பாயாக யா அல்லாஹ் இவர் மீது கருணை காட்டுவாயாக என்று மலக்குகள் துவா செய்து கொண்டிருக்கிறார்கள் அவருடைய உளூ முறியாத வரை. (3)

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் அல்லாஹ் சொல்கிறான் அல்லவா!

وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ

என்றென்றும் நிலையாக இருக்கக்கூடிய நற்செயல்கள்தான் உம் இறைவனிடம் (உங்களுக்கு) நன்மையாலும் சிறந்தவை; (அல்குர்ஆன் : 18:46)

எந்த இழப்பை பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள் உங்களிடத்திலே ஈமானும் அமலும் இருக்கின்றதா? நீங்கள் தான் அல்லாஹ்வுடைய ஒளியிலும், வெளிச்சத்திலும், நேர் வழியிலும், அருளிலும், பரக்கத்திலும் இருப்பவர்கள்.

எது! பரக்கத் பெரிய வீடு கட்டுவதா? பெரிய வாகனம் வாங்குவாத? பெரிய படிப்பு மற்றும் பட்டம் பெறுவதா? குர்ஆனை நீங்கள் ஓதி விட்டால், அதை ஓத தெரிந்துகொண்டால், அதனுடைய சூராக்களை நீங்கள் மனப்பாடம் செய்து கொண்டால், அதனுடைய கருத்தை எடுத்து நீங்கள் சிந்திக்க படிக்க ஆரம்பித்து விட்டால் நீங்கள்தான் பரக்கத் பெற்றவர்கள்.

நீங்கள் எங்கயும் தேட அவசியமில்லை, எந்த இறைநேசரும் அருள்பொழிய முடியாது, மாறாக நீங்க அல்லாஹ்வின் புரதில்லிருந்து தான் பெறமுடியும். எங்கிருந்து பெறமுடியும்? அல்லாஹ் அருளை எங்க வைத்திருக்கிறான்? அதை குர்ஆனில் வைத்திருக்கிறான்.

وَهٰذَا كِتٰبٌ اَنْزَلْنٰهُ مُبٰرَكٌ

(மனிதர்களே!) இதுவோ பாக்கியமிக்க (அதிமான நன்மைகளை உடைய) வேதமாகும். இதை நாமே இறக்கினோம்.

(அல்குர்ஆன் 6 :155)

அல்லாஹ் அக்பர் பரக்கத்தான வேதம் நாம் இறக்கி இருக்கின்றோம் இந்த வேதத்தை ஏன்?

لِّيَدَّبَّرُوْۤا اٰيٰتِه

இதனுடைய வசனங்களை சிந்தியுங்கள் சிந்தியுங்கள் ஆராய்ச்சி செய்யுங்கள் இதை ஓதுங்கள் படியுங்கள்.

(அல்குர்ஆன் 38 : 29)

اٰنَآءَ الَّيْلِ

அல்லாஹ்வுடைய வேதத்தை இரவும் பகலுமாக ஓதுங்கள். (அல்குர்ஆன் 3 :113)

اُتْلُ مَاۤ اُوْحِىَ اِلَيْكَ مِنَ الْكِتٰبِ وَاَقِمِ الصَّلٰوةَ

நபியே உங்களுக்கு இறக்கப்பட்ட இந்த வேதத்தை படியுங்கள், ஓதுங்கள் ,இதை சிந்தியுங்கள்.
(அல்குர்ஆன் 29 : 45)

فَاقْرَءُوْا مَا تَيَسَّرَ مِنَ الْقُرْاٰنِ

முடிந்த அளவு குர்ஆனை படித்துக் கொண்டே இருங்கள் குர்ஆனை படிப்பது என்றால் அதனுடைய அரபி வாசகத்தையும் ஓதுவது, அதனுடைய கருத்தையும் தெரிவது. அரபி மொழி தெரியவில்லையா குறைந்தது ஒரு பக்கத்தை ஓதுங்கள் அதனுடைய தமிழாக்கத்தை அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பை படித்துக் கொண்டே இருங்கள். அன்பு சகோதரர்களே பரகத்-அருள் குர்ஆனிலே இருக்கிறது. (அல்குர்ஆன் 73 : 20)

قُلْ بِفَضْلِ اللّٰهِ وَبِرَحْمَتِه

அல்லாஹ் சொல்கிறான்: உங்களுக்கு அல்லாஹ்வுடைய செல்வம் கொடுக்கப்பட்டிருக்கிறது,
அல்லாஹ்வுடைய ரஹ்மத் கொடுக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 10 : 58)

هُوَ خَيْرٌ مِّمَّا يَجْمَعُوْنَ

மறுமையை தெரியாதவர்கள் சேகரிக்கக்கூடிய செல்வத்தை விட இந்த குர்ஆன் உங்களுக்கு சிறந்ததாகும். என்று அல்லாஹ் சொல்கிறான் இந்த குர்ஆன் உங்களுக்கு சிறந்தது என்று அல்லாஹ் சொல்கிறான்.

அன்பு சகோதரர்களே! பெரியவர்களே! தாய்மார்களே! நாம் பாக்கியம் பெற்றவர்கள், உயர்ந்தவர்கள்
உணர்ந்து கொள்ளுங்கள்.

كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ

(அல்குர்ஆன் 3 : 110)

உங்களிடத்திலே படிப்பு இல்லை என்றாலோ அல்லது இணைவைப்பாளர்களிடத்தில் இருக்கக்கூடிய வசதி, செல்வம் இல்லை என்றாலோ நீங்கள் உங்களை தாழ்வாக நினைத்து விடாதீர்கள்.

لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِيْنَ كَفَرُوْا فِى الْبِلَادِ مَتَاعٌ قَلِيْلٌ ثُمَّ مَاْوٰٮهُمْ جَهَنَّمُ وَ بِئْسَ الْمِهَادُ

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

(நபியே!) நிராகரிப்பவர்கள் (ஆடம்பரமாக) நகரங்களில் சுற்றித்திரிவது உம்மை ஒருபோதும் மயக்கிவிட வேண்டாம். (இது) ஓர் அற்ப இன்பமாகும். பிறகு, அவர்களுடைய தங்குமிடம் ஜஹன்னம் (நரகம்)தான். அது மிக கெட்ட தங்குமிடமாகும். (அல்குர்ஆன் 3 : 196 ,197)

வசனத்தின் கருத்து: அல்லாஹ் சொல்கிறான் நபியே காஃபிர்கள் உடைய செல்வங்கள் உலகத்திலேயே அவர்கள் ஆடம்பரமாக சுற்றுவது அங்கே இங்கே என்று அவர்கள் சுற்றுலா செல்வது உங்களை மயக்கி விட வேண்டாம் நபியே! அவர்கள் நரகத்திலே தங்கப் போகிறார்கள் அல்லாஹ் அக்பர் இங்க 5 ஸ்டார் ஹோட்டலில் தங்குவார்கள் மறுமையிலே நரகம் கொழுந்துவிட்டு எரியக்கூடிய புகைகளால் சூழ்ந்த நரக நெருப்பிலே விஷ புகையால் விஷக்காற்றால் உஷ்ண காற்றால் சூழ்ந்த அந்த நரக நெருப்பிலே அவர்கள் தங்கப் போகிறார்கள்.

நீங்கள் அவர்களைப் பார்த்து மயங்கி விடாதீர்கள் அவர்களுடைய ஆடம்பர வாழ்க்கையை பார்த்து மயங்கி விடாதீர்கள் அல்லாஹ் சொல்கிறான் சூரா ஜுஹுரூப் என்று ஒரு அத்தியாயத்தையே வைத்திருக்கிறான் காபிர்களுக்கு அல்லாஹ் கொடுத்த செல்வத்தைப் பற்றி எல்லாம் சொல்கிறான் முஃமீன்கள் பலவீனம் அடைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் காபிர்களுக்கு அல்லாஹ் செல்வத்தை குறைத்துக் கொடுத்திருக்கிறான்.

நீங்கள் பலவீனப்பட மாட்டீர்கள் என்று இருந்தால் அவர்களுடைய வீடுகள் எல்லாம் தங்கங்களாலக கதவுகள் எல்லாம் தங்கங்களாக அவர்களுடைய மாறி படிகள் எல்லாம் தங்கங்கள் வெள்ளிகளால் செய்யப்பட்டதாக நாம் ஆக்கி கொடுத்திருப்போம் சுபஹானல்லாஹ் ஏன்? சகோதரர்களே பெரியவர்களே தாய்மார்களே! எந்த உலகத்தை பார்த்து நாம் பிரமிக்கின்றோமோ நமக்கு மயக்கம், ஆசை, மோகம் அதன் மீது வருகின்றதோ அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்:

لَوْ كَانَتِ الدُّنْيَا تَعْدِلُ عِنْدَ اللَّهِ جَنَاحَ بَعُوضَةٍ مَا سَقَى كَافِرًا مِنْهَا شَرْبَةَ مَاءٍ

இந்த உலகம் இறைவனின் பார்வையில் கொசுவின் இறக்கை அளவுக்கு சமமாக இருந்தாலும் சரி காஃபீருக்கு குடிக்க கூட ஒரு சொட்டு தண்ணீரை கூட அல்லாஹ் கொடுத்திருக்க மாட்டான்.

அவ்வளவு அற்பமான உலகமாகும். அல்லாஹ்வுடைய தீனுக்காக இது செலவழிக்கப்படவில்லை என்றால், அல்லாஹ்வுடைய மஸ்ஜிதிற்காக, மதராஸாவுக்காக, மர்கஸுக்காக, உறவுகளுக்காக, ஏழைகளுக்காக, அல்லாஹ்வுடைய மார்க்கத்தை பரப்புவதற்காக, படிப்பதற்காக இது செலவழிக்கப்படவில்லை என்றால்!

இதை விட ஒரு குப்பை உலகில் எதுவுமில்லை. எந்த செல்வம் அல்லாவுக்காக செலவழிக்கப்பட்டதோ அதுதான் நிரந்தரமானதாகும்.

அறிவிப்பாளர் : ஸஹ்ல் இப்னு ஸஃது ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹுத் திர்மிதி, : எண் : 2320.

وَمَا تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرًا وَّاَعْظَمَ اَجْرًا

உங்களுக்காக நன்மையில் எதை நீங்கள் முற்படுத்துகிறீர்களோ அதை அல்லாஹ்விடம் (நீங்கள் செய்ததை விட) மிகச் சிறப்பாகவும் கூலியால் மிகப் பெரியதாகவும் நீங்கள் பெறுவீர்கள். (அல்குர்ஆன் : 73:20)

வசனத்தின் கருத்து: அன்பிற்குரியவர்களே நாம் உயர்ந்தவர்கள் நாம் பரக்கத் பெற்றவர்கள் அல்லாஹ்வுடைய விசேஷமான பஹ்ல் அல்லாஹ்வுடைய விசேஷமான செல்வம் அருள் கிடைக்கப்பெற்றவர்கள் அல்லாஹ்வுடைய ரஹ்மத் கிடைக்கப் பெற்றவர்கள்.

وَكَانَ بِالْمُؤْمِنِيْنَ رَحِيْمًا

அவன் நம்பிக்கையாளர்கள் மீது மகா கருணையாளனாக இருக்கிறான். (அல்குர்ஆன் : 33:43)

اللّٰهُ مَوْلٰٮكُمْ

அத்தகைய ரப்பு நமக்கு இருக்கின்றான். (அல்குர்ஆன் : 3:150)

நம்மளுடைய எஜமானாக அல்லாஹ் இருக்கிறான். நாம் உயர்ந்தவர்கள் சகோதரர்களை நாம் உயர்ந்தவர்கள் வெளிச்சம் கிடைக்கப் பெற்றவர்கள். அல்லாஹுத்தஆலா இந்த தவ்ஹீத் லாயிலாஹ இல்லல்லாஹ் இதை கொடுத்து நம்முடைய அறிவை அல்லாஹுத்தஆலா திறந்தான்.

இந்த லாயிலாஹ இல்லல்லாஹ்வை கொடுத்து அல்லாஹ் நம்மை உயர்த்தி இருக்கிறான். இந்த லாயிலாஹ இல்லல்லாஹ்வை கொடுத்து அல்லாஹ் நம்மை கண்ணியப்படுத்தி இருக்கிறான். நம்முடைய சிந்தனை, அறிவு, பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம் அனைத்தையும் இந்த ஒரு மந்திரத்தை கொண்டு.

இதை விட பெரிய மந்திரம் எதுவும் கிடையாது அற்புதமான மந்திரம் அழகிய மந்திரம் உள்ளங்களை புரட்டிப் போடக் கூடியது. அல்லாஹ் அக்பர் இந்த லாயிலாஹ இல்லல்லாஹ்வை கொண்டு அல்லாஹுத்தஆலா நம்மை ஒளியில்,மற்றும் வெளிச்சத்தில் கொண்டு வந்திருக்கிறான். இதற்குப் பிறகு இருளை நோக்கி செல்லலாமா?

فَمَاذَا بَعْدَ الْحَـقِّ اِلَّا الضَّلٰلُ فَاَنّٰى تُصْرَفُوْنَ

ஆக, “அந்த அல்லாஹ்தான் உங்கள் உண்மையான இறைவன். ஆக, (இந்தளவு தெளிவான) உண்மைக்குப் பின்னர் வழிகேட்டைத் தவிர (வேறு) என்ன இருக்கிறது? ஆகவே, நீங்கள் (உண்மையிலிருந்து) எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள்? (அல்குர்ஆன் 10 : 32)

அல்லாஹ் கேட்கிறான்? மூமின்களே! இந்த சத்தியத்திற்கு பிறகு நீங்கள் வேறொன்றை தேர்ந்தெடுத்தால் அது வழிகேடாக இல்லாமல் வேறு எதுவாக இருக்கும். எங்கே நீங்கள் திருப்பப்படுகிறீர்கள் வேறு எங்கே நீங்கள் திருப்பப்படுகிறீர்கள்.

اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَۙ‏ فَاَيْنَ تَذْهَبُوْنَ

ஆக, (இதனை விட்டு) நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? இது இல்லை, அகிலத்தார்களுக்கு ஓர் அறிவுரையாகவே தவிர! (அல்குர்ஆன் 81 : 26, 27)

அல்லாஹ் கேட்கிறான் இந்த குர்ஆனை விட்டுவிட்டு இந்த தவ்ஹீதை விட்டுவிட்டு இந்த ஈமானை இந்த இஸ்லாமை விட்டுவிட்டு நீங்கள் எங்கே போகிறீர்கள் கேட்கிறானா இல்லையா அல்லா சுபஹானல்லாஹ்

اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ كَرِيْمٍۙ‏

நிச்சயமாக இது (-இந்த குர்ஆன்) கண்ணியத்திற்குரியவரான தூதர் (ஜிப்ரீல்) உடைய கூற்றாகும் அவர் மூலம் இறக்கப்பட்ட இறை வேதமாகும். (அல்குர்ஆன் 81 : 19)

ذِىْ قُوَّةٍ عِنْدَ ذِى الْعَرْشِ مَكِيْنٍۙ‏

(அவர்) பலமுடையவர், அர்ஷுடையவனிடம் பதவி உடையவர். (அல்குர்ஆன் 81 : 20)

مُّطَاعٍ ثَمَّ اَمِيْنٍ

அங்கு (வானவர்களின்) கீழ்ப்படிதலுக்கு உரியவர், (அல்லாஹ்விடம்) நம்பிக்கைக்குரியவர். (அத்தகைய வானவத் தூதர் ஜிப்ரீல் வாயிலாக இறக்கப்பட்ட கூற்றாகும் இந்த குர்ஆன்.) (அல்குர்ஆன் 81 : 21)

وَ مَا صَاحِبُكُمْ بِمَجْنُوْنٍ

உங்கள் தோழர் (-நபி முஹம்மது) பைத்தியக்காரராக இல்லை. (அல்குர்ஆன் 81 : 22)

وَلَقَدْ رَاٰهُ بِالْاُفُقِ الْمُبِيْنِ

இன்னும், திட்டவட்டமாக தெளிவான அடிவானத்தில் அவர் (-நபி முஹம்மது) அவரை (-ஜிப்ரீலை) கண்டார். (அல்குர்ஆன் 81 : 23)

وَمَا هُوَ عَلَى الْغَيْبِ بِضَنِيْنٍ

மறைவானவற்றில் (-அல்லாஹ் இறக்கிய வேதத்தை மக்களுக்கு கற்பிப்பதில்) அவர் கஞ்சனாக குறைவு செய்பவராக, மறைப்பவராக) இல்லை. (அல்குர்ஆன் 81 : 24)

وَمَا هُوَ بِقَوْلِ شَيْطٰنٍ رَّجِيْمٍۙ‏

இன்னும், அது (-அந்த குர்ஆன், அல்லாஹ்வின் கருணையிலிருந்து) தூக்கி எறியப்பட்ட ஷைத்தானின் கூற்றாக இல்லை. (அல்குர்ஆன் 81 : 25)

فَاَيْنَ تَذْهَبُوْنَ

ஆக, (இதனை விட்டு) நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? (அல்குர்ஆன் 81 : 26)

குர்ஆனை அல்லாஹுத்தஆலா சொல்லும் பொழுது ஜிப்ரீலை பற்றி சொல்கிறான் யாரை? ஜிப்ரீலை நமக்கு தெரியுமா? ஜிப்ரீல் யார் என்று நம் பிள்ளைகளுக்கு, வாலிபர்களுக்கு சொல்லிக் கொடுக்கணும் நம்முடைய உம்மத் அல்லாஹ்வை அறிவது எப்படி கடமையோ அதைப்போன்று ஜிப்ரீலை அறிவது கடமையாகும்.

مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓـٮِٕكَتِهٖ وَرُسُلِهٖ وَجِبْرِيْلَ وَمِيْكٰٮلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ

அல்லாஹ்வுக்கு எதிரி யாரோ மலக்குகளுக்கு யார் எதிரியோ அல்லாஹ்வுடைய ரசூல்மார்களுக்கு யார் எதிரியோ ஜிப்ரிலுக்கு யார் எதிரியோ மீகாயிலுக்கு யார் எதிரியோ அத்தகைய காஃபிர்களுக்கு அல்லாஹ் எதிரியாக இருக்கிறான் ஜிப்ரீலை அறிவது ஈமான் அல்லாஹ் இந்த குர்ஆனை ஜிப்ரீலின் மூலமாக நான் கொடுத்தேன். (அல்குர்ஆன் 2 : 98)

اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ كَرِيْمٍۙ

கன்னியமான ரசூல் ஜிப்ரயிலின் மூலமாக உங்களுக்கு அருளப்பட்ட வார்த்தையாகும்.

ذِىْ قُوَّة

மிக்க வலிமை மிக்கவர். (அல்குர்ஆன் 2 : 98)

عِنْدَ ذِى الْعَرْشِ مَكِيْنٍۙ

அல்லாஹ்விடத்தில் மதிப்பும் மரியாதைக்கும் உரியவர். (அல்குர்ஆன் 81:20)

مُّطَاعٍ ثَمَّ اَمِيْنٍ

மலக்குகளுக்கெல்லாம் தலைவர் நம்பிக்கை கூறியவர் அவர் மூலமாக கொடுக்கப்பட்ட குர்ஆன் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது இது சைத்தானின் பேச்சு அல்ல. (அல்குர்ஆன் 81:21)

فَاَيْنَ تَذْهَبُوْنَ

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

இந்த குர்ஆனை விட்டுவிட்டு குர்ஆன் கொடுக்கப்பட்ட சமுதாயமே எங்கே செல்கிறீர்கள் உங்களது வெற்றி உங்களது எழுச்சி உங்களது உயர்வு உங்களது கண்ணியம் எல்லாம் இந்த குர்ஆனிலே இருக்கிறது. (அல்குர்ஆன் 81 : 26)

فَاَيْنَ تَذْهَبُوْنَ

எங்கே நீங்கள் செல்கிறீர்கள் இந்த குர்ஆனை விட்டுவிட்டு. (அல்குர்ஆன் 81:26)

சமுதாயம் சினிமாவிற்கும், சீரியலுக்கும், விளையாட்டுக்கும், ஆட்டம் பாட்டத்திற்கும் சென்று விட்டது. படிப்பு என்றும் பொருளாதாரம் என்றும் குர்ஆனுடைய கல்வியை விட்டு விட்டு எல்லா கல்வியையும் கற்கிறார்கள்.

அல்லாஹுத்தஆலா முஸ்லிம்களுடைய எழுச்சியை, உயர்வை, மதிப்பை இந்த குர்ஆனிலே வைத்திருக்கிறான். ஷைத்தான் சூழ்ச்சி செய்தான் இந்த முஸ்லிம்கள் குர்ஆனை திறந்து விட்டால், சிந்தித்து விட்டால், இவர்கள் உலகத்தை ஆண்டு விடுவார்கள், கண்ணியம் பெற்று விடுவார்கள், தவ்ஹீதிலே இருப்பார்கள், ஷிர்க் செய்ய மாட்டார்கள், பித்அத்தின் பக்கம் செல்ல மாட்டார்கள், குர்ஆனை கையில் இருந்து பறிக்க ஆரம்பித்தான்.

குர்ஆனை கையில் இருந்து பறித்து விட்டான் அப்படியே மீறி குர்ஆனை எடுத்தாலும் வெறுமென கையில் எடுத்து முத்தம்மிட்டு மட்டுமே வைத்து விடுவதுதாகும். அதைப் பார்த்தால் அருள், பாக்கியம் அதை தொட்டால் அருள், பாக்கியம் அதை முத்தமிட்டால் அருள், பாக்கியம் மூடி வைத்து விடு சிந்திக்காதே, ஓதாதே ஆராய்ச்சி செய்யாதே, உனக்கு குர்ஆன் விளங்காது, குர்ஆனை படித்தால் நீ வழிகெட்டு விடுவாய்.

ஒரு சாரர் இருக்கிறார்கள் அவர்கள் மஸ்ஜிதில் நீங்கள் தர்ஜிமாவை படியுங்கள் என்று கூறினால் அதை மறைத்து வைத்துவிடுவார்கள். இன்னும்,அவர்கள் தங்களுக்கென்று ஒரு வேதம் இருக்கிறது.அதைகொடுத்தால் உட்கார்ந்து ஓர்மையுடன் படிப்பார்கள். இன்னும் இவ்வாறு வெறும் ஓதுங்க ஒரு நாளைக்கு ஒரு ஜூஸ் ஓதுங்க பிறகு மூடிவிடுங்கள்.

அன்பு சகோதரர்களே! ஏன் ஷைத்தான் அவர்களை வழி கெடுக்கிறான் அல்லாஹ் என்ன சொல்கிறான்? அவன் உங்களை கண்ணியப்படுத்த விரும்புகிறான் அல்லாஹுதஆலா நம்மை கண்ணியப்படுத்த, சிறப்பிக்க, அறிவை கொடுக்க விரும்புகிறான் அறிவு எங்கே இருக்கிறது அது தான் குர்ஆனிலே இருக்கிறது.

يٰسٓ

யா ஸீன் (அல்குர்ஆன் 36 : 1)

وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ

ஞானமிகுந்த குர்ஆன் மீது சத்தியமாக! (அல்குர்ஆன் 36 : 2)

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْحَكِيْمِۙ

இவை ஞானமிக்க வேதத்தின் வசனங்களாகும். (அல்குர்ஆன் 31 : 2)

ஞானமிக்க வேதத்தின் மீது சத்தியமாக குர்ஆனில் ஞானம் இருக்கு எங்கே இருக்கு குர்ஆனில் ஞானம் இருக்கிறது இந்த குழந்தைகளுக்கு குர்ஆனை கற்றுக் கொடுங்கள் பெரிய லுக்மானுடைய ஞானத்தை இந்த குழந்தை பேசும் எங்கே இருக்கின்றது ஞானம் குர்ஆனிலே இருக்கிறது அறிவு நபிமார்களின் அறிவு குர்ஆனிலே அல்லாஹ்வுடைய ஹிக்குமத் -நுட்பம் இந்த குர்ஆனில் ஞானமிக்க வேதத்தின் வசனங்கள் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த சமுதாயத்தை குர்ஆனை கொண்டு கட்டி எழுப்பினார்கள்.

சஹாபாக்களுக்கு குர்ஆனை கொடுத்தார்கள் ஓதுங்கள், படியுங்கள், பரப்புங்கள், சிந்தியுங்கள் குர்ஆன் உடைய உம்மத்தாக வாழுங்கள் இன்னும், தொழுகையில் ஓதுங்கள் சிந்தித்தவர்களாக ஓதுங்கள் எப்படி ஓத வேண்டும் தொழுகையில்.

وَاِذَا قُرِئَ الْقُرْاٰنُ فَاسْتَمِعُوْا لَه وَاَنْصِتُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

அன்பு சகோதரர்களே! தொழுகையில் குர்ஆன் ஓதப்படும் பொழுது அதை காது கொடுத்து செவி தாழ்த்திக் கேட்டால். அல்லாஹ் சொல்கிறான் நீங்கள் அல்லாஹ்வால் கருணை காட்டப்படுவீர்கள். (அல்குர்ஆன் 7 : 204)

لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

அல்லாஹ் கருணை காட்டினால் நம்மை இரட்சிப்பதற்கு வேறு யாரு தேவை சொல்லுங்கள் பார்க்கலாம் அல்லாஹுத்தஆலா உடைய ரஹமத் தொழுகையிலே நின்று விட்டால் சஹாபாக்கள் எப்படி நிற்பார்கள் ஓதப்படக்கூடிய அந்த இமாமுடைய திலாவத்தை அதிலே எப்படி அவர்கள் தங்களை அப்படியே ரசித்து மயங்கி விடுவார்கள்.

குர்ஆனில் மயங்கி, சொக்கி விடுவார்கள் நாம் எப்படின்னு சொன்னா குர்ஆன் அங்கு இருக்குன்னா நம்ம இங்கதான் இருக்கணும் எப்படி இருக்கும் ஒன்னும் நுகரவில்லை அந்த உணர்வு அந்த ருசி ஒரு சம்பவம் அதில் இது ஒரு முக்கியமான சம்பவம்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா இரவு நேரத்தில் தங்களுடைய தேவைக்காக வெளியே செல்கிறார்கள். சென்று திரும்பும்போது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பயந்து விட்டார்கள்.

ஒரு பெண்ணை அதுவும் மனைவி அன்பான, பாசமான, பிரியமான, மனைவி ஆயிஷா பயந்து விட்டேன் பதறிவிட்டேன் ஏன் தாமதம் என்று கேட்டார்கள். யா ரசூலுல்லாஹ் நான் எவ்வாறு கூறுவது நான் மஸ்ஜிதை கடந்த போது உங்களுடைய தோழரில் ஒருவர் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார் அதை கேட்டு என்னை மறந்து விட்டேன்.

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

கண்ணியத்குரியவர்களே! இசையில் மனதை பறி கொடுத்தவர்களுக்கும் ஆடல் பாடலை பார்த்து ரசிப்பவர்களுக்கும் குர்ஆனுடைய மகிமை எங்கே தெரிய போகிறது. அல்லாஹ்வுடைய ஈமான் உள்ளத்தில் இறங்காதவர்களுக்கு இறைவனின் கண்ணியம் உள்ளத்தில் இறங்காதவர்களுக்கு குர்ஆன் புரியுமா? அல்லாஹ்வுடைய வார்த்தை என்றால் என்னவென்று உணராதவர்களுக்கு குர்ஆன் புரியுமா?

لَا يَأْتِيهِ الْبَاطِلُ مِنْ بَيْنِ يَدَيْهِ وَلَا مِنْ خَلْفِهِ تَنْزِيلٌ مِنْ حَكِيمٍ حَمِيدٍ

அதற்கு முன்னிருந்தும் அதற்குப் பின்னிருந்தும் பொய்யர்கள் அதனிடம் வரமாட்டார்கள். (பொய்யர்கள் யாராலும் அதில் இல்லாததை அதில் சேர்க்கவும் முடியாது, அதில் உள்ளதை அதில் இருந்து எடுக்கவும் முடியாது.) மகா ஞானவான், மகா புகழுக்குரியவனிடமிருந்து இறக்கப்பட்ட வேதமாகும் (இது). (அல்குர்ஆன் 41 : 42)

இதற்கு முன்னாடியும் பின்னாடியும் எந்த பொய்யும் கலக்க முடியாது அந்த குர்ஆனுடைய கண்ணியம் புரியுமா யார் இதை கற்கவில்லையோ இதை படிக்கவில்லையோ இதற்காக சிரமப்படவில்லையோ இதை உச்சரிப்பாக ஓதுவதற்கு இதனுடைய பொருளை புரிவதற்கு யார் சிறிதளவும் சிரமப்படவில்லையோ அவர்களுக்கு எவ்வாறு புரியும்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா என்ன சொன்னார்கள் உங்களுடைய ஒரு தோழர் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார் அல்லாஹ்வின் தூதரே நான் என்னை மறந்து விட்டேன் நீங்கள் பயப்படுவீர்கள் என்று மட்டும் இல்லை என்றால் நான் அந்த இடத்தை விட்டு வந்திருக்க மாட்டேன்.

அல்லாஹ் அக்பர் என்னங்க உணர்வு என்ன ஒரு ஈமான் என்ன ஒரு ரூஹானியத்தில அவர்கள் வாழ்ந்திருப்பார்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டு விட்டு ஆயிஷா! அப்படியா வாருங்கள் நானும் கேட்க வருகிறேன் இமாம் ஹாக்கீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி இந்த ஹதீஸை பதிவு செய்கிறார்கள் ஆயிஷா நம்மள இருந்தா,

என்ன செய்வோம் வாடி போய் படுடி நேரமாச்சு ராத்திரியில சும்மா போயிட்டு .. ராத்திரியில டிவி பார்க்கலாம் அது பாரு எல்லா ஹராம் வேலையும் செய்யி யாரும் உங்கள குறை சொல்ல மாட்டாங்க குர்ஆனை எடுத்துட்டு உட்கார்ந்தா மட்டும் போதும் போதும் ஓதியாச்சு மூடி வச்சிட்டு தூங்கு அஸ்தஃபிருல்லாஹ் என்ன உம்மத்துங்க,

இது சஹாபாக்கள் உடைய வீடுகளின் அடையாளம் என்ன தெரியுமா இரவு நேரங்களிலே குர்ஆன் அங்கே... ஹதீஸ் நூல்களிலே பதியப்படுகிறது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்கிறார்கள் சஹாபாக்கள் சொல்கிறார்கள்,

அஷ்ஹரி குடும்பத்தார்கள் மதினாவிற்குள் வந்து விட்டார்கள் என்பதை இரவு நேரங்களில் கூடாரங்கள் வெளிச்சமாக இருப்பதிலும் அங்க குர்ஆனுடைய சப்தத்தில் நாங்கள் அறிந்து கொள்வோம் அபு மூஸா அஷ்ஹரி குடும்பத்தார்கள் வந்துவிட்டார்கள்.

என்று ஹிந்துன்னு ஒரு பெண் இருந்தாங்க பயங்கரமான ஆளு பயங்கரமான ஆளு அவர்களை எது மாற்றியது தெரியுமா மக்கா வெற்றியின் போது இரவிலே இந்த முஹம்மதுடைய ஆட்கள் என்ன செய்கிறார்கள் பொதுவாக வெற்றி கொண்டவர்கள் என்ன செய்வார்கள்

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

اَذِلَّةً اَهْلِهَآ اَعِزَّةَ وَجَعَلُوْۤا اَفْسَدُوْهَا قَرْيَةً دَخَلُوْا اِذَا الْمُلُوْكَ اِنَّ قَالَتْ

அவள் கூறினாள்: “நிச்சயமாக மன்னர்கள் ஓர் ஊருக்குள் நுழைந்து விட்டால் அதை சின்னாபின்னப்படுத்தி விடுவார்கள். அந்த ஊர்வாசிகளில் உள்ள கண்ணியவான்களை இழிவானவர்களாக ஆக்கிவிடுவார்கள். (ஆகவே, இவர்களும்) அப்படித்தான் செய்வார்கள். (அல்குர்ஆன் 27 : 34)

வசனத்தின் கருத்து: அரசர்கள் ஒரு ஊருக்கு சென்று விட்டால் வெற்றி கொன்று விட்டால் அந்த ஊரை நாஸ்தி செய்து விடுவார்கள் சின்னா பின்னம் ஆக்கி விடுவார்கள் பெண்களுடைய கற்புக்கு பாதுகாப்பு இருக்காது யாருடைய உயிருக்கும் உத்தரவாதம் இருக்காது யாருடைய செல்வத்திற்கும்

எந்த பாதுகாப்பும் இருக்காது அப்பேர்பட்ட ஆல் சாட்டியங்களை செய்வார்கள் இங்கே ஹிந்த் இரவிலே முகமது உடைய தோழர்கள் வெற்றி கலப்பிலே வெற்றியை கொண்டாடுவார்கள் ஆடல் பாடல் என்ன என்னவெல்லாம் நடக்குமோ வெற்றியிலே,

என்று வந்தால் இங்கே முஹம்மதுடைய தோழர்கள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கூடாரங்களில் இருந்து குர்ஆனுடைய சப்தம் வந்து கொண்டிருக்கிறது ஒருவர் தொழுகையிலே ஓதுகிறார் ஒருவர் ஒரு கூவிலே இருக்கிறார்

وَرِضْوَانًا اللّٰهِ مِّنَ فَضْلًا يَّبْتَغُوْنَ سُجَّدًا رُكَّعًا تَرٰٮهُمْ

(தொழுகையில் குனிந்து) ருகூஃ செய்தவர்களாக; (சிரம் பணிந்து) சுஜூது செய்தவர்களாக அவர்களை நீர் காண்பீர். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் விரும்புகிறார்கள். (அல்குர்ஆன் 48 : 29)

ஒருவர் ருக்குவில இருக்காரு ஒரு சுஜூதில இருக்காரு ஒருத்தரை தொழுகையில் குர்ஆன் ஓதுறாரு ஒருவர் உட்கார்ந்து கொண்டு ஓதுறாரு சுத்தி சுத்தி வராரு யாரு ஹிந்த் பார்த்தா கூடாரங்கள் எல்லாம் குர்ஆனுடைய சப்தங்களை கொண்டு அப்படியே ஒளிமயமாகி கொண்டு இருக்கிறது.

இவர்களல்லவா மனிதர்கள் அன்றைக்கு காலையிலேயே சஹாதா சொல்லிட்டாங்க யார் ஹிந்த் அன்றைக்கு காலையில ரசூல் அல்லாஹ்வை பார்த்து அதுவும் சஹாதா சொல்ற விதம் இருக்கே முஹம்மதே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் யா ரசூலுல்லாஹ் உலகத்திலேயே உங்களுடைய முகத்தை விட வெறுப்பான முகம் யாருடைய முகமும் எனக்கு இருந்ததில்லை.

இப்போ உங்களுடைய முகத்தை விட விருப்பமான முகம் எனக்கு எதுவும் இல்லை எப்படி மாறிடுச்சு பாருங்க முஹம்மதே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உலகத்துல உங்களுடைய தோழர்களை விட வெறுப்பானவர்கள் யாரும் எனக்கு இருந்ததில்லை.

இப்போது உங்களுடைய தோழர்களை விட விருப்பமானவர்கள் எனக்கு யாரும் இல்லை முஹம்மதே கூடாரத்திலே உங்களுடைய கூடாரத்தை விட வெறுப்பான ஒரு கூடாரம் எனக்கு இருந்தது இல்லை இப்போது கூடாரங்களில் மிக விருப்பமான கூடாரம் உங்களுடைய கூடாரம்.

உங்களுடைய தோழர்களின் கூடாரம் ஏன் அங்கே ஆடல்கள் இல்லை பாடல்கள் இல்லை கூத்து இல்லை கும்மாளம் இல்லை எது இருந்தது குர்ஆன் இருந்தது.

அன்பு சகோதரர்களே! ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ன சொல்லுகிறார்கள்? ஆயிஷா வாங்க நானும் கேட்கிறேன் அந்த தோழனுடைய கிராத்தை நானும் கேட்கிறேன் என்று கணவனும் புறப்படுகிறார் மனைவியோடு பள்ளியிலேயே வந்து நின்றால் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களுடைய மனைவி எந்த மனைவி யாரு?

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா சொன்னாங்க வாங்க நம்ம ரெண்டு பேரும் போய் கேட்போம் அல்லாஹ்வுக்கு கணவன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்து இபாதத்து செய்வது பிடிக்கும் இன்றைக்கு கணவன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்து,

சுத்த போறாங்க ஒரு தனி சப்ஜெக்ட் அதை விட்டுடுங்க இபாதத்துல மட்டும் சேர மாட்டேங்கிறாங்க இபாதத்துல மட்டும் நீ உன் வேலையை பாரு நான் என் வேலையை பார்க்கிறேன் இதைவிட என்னங்க வேலை இருக்கு நமக்கு இபாதத்தை விட என்ன வேற என்ன வேலை இருக்கு நமக்கு

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

ஜின்களையும் மனிதர்களையும் - அவர்கள் என்னை வணங்குவதற்கே தவிர - நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51 : 56)

வசனத்தின் கருத்து: இந்த இபாதத்துக்கு தான் அல்லாஹ் நம்மளை படைச்சான் நமக்கு அல்லாஹ் சோறு போடுறான் எதற்கு அல்லாஹ் சோறு போடுறான் நீ வணங்கு என்ன அப்புறம் பாருங்க சோறு போட்டு நமக்கு எல்லா துன்னியாவையும் கொடுத்து.

هُوَ الَّذِىْ خَلَقَ لَـكُمْ مَّا فِى الْاَرْضِ جَمِيْعًا

அவன்தான் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான். (அல்குர்ஆன் 2 : 29)

வசனத்தின் கருத்து: மொத்த துணியாவும் நான் உனக்கு படைச்சிருக்கேன்னு சொல்லி நீ இபாதத்து செய் என்று சொல்லிட்டு நீங்க இபாதத்து செஞ்சா நீ மறுமையில வா உனக்கு அந்த இபாதத்தை நன்மையா திருப்பி தரேன் என்கிறான் அவனுக்கு தேவை இல்லை இபாதத் யாருக்கு தேவையில்லை.

يٰۤاَيُّهَا النَّاسُ اَنْتُمُ الْفُقَرَآءُ اِلَى اللّٰهِ

மக்களே! நீங்கள்தான் அல்லாஹ்வின் பக்கம் தேவையுள்ளவர்கள். அல்லாஹ் - அவன்தான் முற்றிலும் நிறைவானவன், புகழுக்குரியவன் ஆவான். (அல்குர்ஆன் 35 : 15)

வசனத்தின் கருத்து: மக்களே நீங்கள் எல்லாம் அல்லாஹ்வின் பக்கம் தேவையான பிச்சைக்காரர்கள் நீங்கள் எல்லாம் நீங்கள் எல்லாம் ஃபக்கீர்கள் நான்தான் அல்லாஹ் தான் செல்வமிக்கவன் அவனுக்கு தான் தேவை இல்லை நீங்கள் எல்லாம் தேவை உள்ள ஃபக்கீர்கள் மிஸ்கின்கள் எல்லாம் யாரு மிஸ்கின்

ஃபக்கீர் எல்லாமே புரியுதா தம்பி ஃபக்கீர் என்றால் யார் அல்லாஹ்வின் பக்கம் தேவை உள்ளவர்கள் சரி அப்ப போறாங்க போனா அல்லாஹ் அக்பர் அங்க ஒரு சஹாபி குர்ஆன் ஓதுறாரு அதைப் பார்த்த உடனே ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னாங்க பாருங்க ஒரு வார்த்தை ஆயிஷா இவரை உனக்கு தெரியாது? இவர உனக்கு தெரியாது? இவரு பேர சொல்லி அல்லாஹ் எனக்கு வஹீ அனுப்பினான் இவரு குர்ஆன் ஓதுனா நான் கேக்கணும்னு சொல்லி அந்த சஹாபி ஆயிஷா இவங்க யார் அவங்க சாலீம் யார் அவங்க

وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ

(இஸ்லாமை ஏற்பதில்) முதலாமவர்களாகவும் முந்தியவர்களாகவும் இருந்த முஹாஜிர்கள்; இன்னும், அன்ஸாரிகள்; (அல்குர்ஆன் 9 : 100)

என்று முஹாஜீர்களில் முந்தியவர்கள் முதலாம் அவர்கள் என்று அல்லாஹ் போற்றுகிறான் அந்த சஹாபில ஒருத்தரு ரசூலுல்லாஹ்விடத்திலே குர்ஆனுக்கு இஜாசா சர்டிபிகேட் வாங்குன அஞ்சு அல்லது ஆறு சஹாபாக்கள்ல முக்கியமானவர் இவருக்கு,

பின்னாடி அபூபக்கர் உமர் எல்லாம் தொழுவார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மதீனாவிற்கு வந்தப்ப மஸ்ஜித் நபவி அல்லாமல் ஏழு தொழுகை இடங்கள் மதினாவை சுற்றி தூரத்தில இருந்துச்சு அங்க ஒரு மஸ்ஜிதுல யாரு இமாம் அவருக்கு,

பின்னாடி முக்ததி யாரு அபூபக்கர் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா எல்லாம் யாருக்கு முக்ததீ சாலிமுக்கு மாணவர் ஆயிஷாவே இவர் பெயரை சொல்லி அல்லாஹ் எனக்கு கட்டளையிட்டு இருக்கிறான் ஆயிஷா அப்படின்னு சொன்னாங்க அல்லாஹ்,

ஒஊஃஸ என்ன சொல்லக்பர் அன்பு சகோதரர்களே குர்ஆனை கொண்டு அல்லாஹ் எப்படி உயர்த்தி இருக்கிறான் பாருங்கள் குர்ஆனை கொண்டு அல்லாஹ் எப்படி உயர்த்தி இருக்கிறான் பாருங்கள் ஒரு தடவை உமருல் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு ஹஜ்ஜுக்கு,

வந்தாங்க வந்தா மக்காவுடைய அமீர் கவர்னர் அவர் இஹ்ராமை கட்டிக்கிட்டு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை வரவேற்பதற்கு போய்ட்டாங்க அவரோட உமரா செய்வதற்கு அப்புறம் அப்படியே ஹஜ் போறதுக்கு அவரும் போய்ட்டாரு உமர் ரலியல்லாஹு அன்ஹு கேட்கிறார்கள் எப்பா என்ன நீங்க வந்துட்டீங்க மக்கால,

யாரை நீங்க உங்களுக்கு பிரதிநிதியா நியமிச்சிட்டு வந்து இருக்கீங்க அது கலிஃபா இப்னு அப்ஜாஅப்படின்னு சொல்லி ஒருத்தவர் இருக்காரு அவரு நான் எனக்கு பதிலா அசிஸ்டன்ட் கவர்னரா நியமிச்சிட்டு வந்துட்டேன்னு இப்னு அபுஜாவா,

பேரே கேள்விப்பட்டதில்லையே அவர் யாரு அதான் கலீபா நம்ம அடிமையில ஒருத்தரு புரியுதா உங்களுக்கு மக்காவில் இருக்கக்கூடிய குறைஷிகளுக்கு மக்காவில் இருக்கக்கூடிய உயர்ந்த குலத்தவர்களுக்கு வம்சத்வர்களுக்கு அல்லாஹ்வுடைய வீட்டுடைய ஊருக்கு யாரு அசிஸ்டன்ட் கவர்னர் அதான் கலீபா நம்ம அடிமையில் ஒருத்தரு என்னப்பா நீ அடிமையா அசிஸ்டன்ட் கவர்னரா ஆக்கிட்டீங்க,

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

அமீருல் முஃமினீன் அவர் நல்ல குர்ஆன் ஓத தெரிந்தவரு அவர் குர்ஆனை கற்ற அறிஞர்அவ்வளவுதான் அமீருல் முஃமினீன் அல்லாஹ் அக்பர் குர்ஆனை கொண்டு அல்லாஹ் கண்ணியப்படுத்துவான் ஒரு கூட்டத்தை இந்த குர்ஆனை கொண்டு ஒரு கூட்டத்தை இழிவு படுத்துவான் யார் அவர்கள் இந்த குர்ஆனை படிக்காதவர்கள்,

இந்த உம்மத்துக்கு உயர்வு வேண்டுமா எழுச்சி வேண்டுமா இந்த குர்ஆனிலே இருக்கிறது இந்த குர்ஆனை கொண்டு அடிமையை அல்லாஹ் உயர்த்தி தான் பாருங்கள் மக்கா உடைய கவர்னரா இன்னொரு பக்கம் பார்த்தா இந்த குர்ஆனை விட்டதால் இந்த முஸ்லிம் சமுதாயம் உலகளாவிய அளவிலே அத்தனை குழப்பங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும்,

ஆளாகி கொண்டு இருக்கிறது எல்லா வகையான குழப்பங்களுக்கும் மிகத் தெளிவான தீர்வு இருக்கும் யாருடைய கையிலே குர்ஆன் இருக்குமோ யாருடைய கையில் யார் குர்ஆனை சிந்திப்பார்களோ இன்றைக்கு காஃபிர்கள் வெற்றி கண்டுவிட்டார்கள் முஸ்லிம்களுடைய கரத்திலிருந்து குர்ஆனை பிடுங்கி அதில் வெற்றி கண்டு விட்டார்கள்,

ஒரு பக்கம் நமக்கு பொருளாதார பயத்தை ஊட்டி என்னால நின்னுகிட்டு செய்ய முடியல இல்லாட்டி எனக்கு நின்னுட்டு செய்வதற்கு தான் ஆசையா இருக்கு பொருளாதார பயத்தை ஊட்டி கல்வி படிப்பு என்று அதிலே நம்மை ஈடுபடுத்தினார்கள் நான் குறை சொல்லல ஆனால் குர்ஆனை விட்டு விட்டார்களா இல்லையா நம்முடைய வாலிபர்கள்,

ஒன்னும் இல்ல இங்கே மாஷா அல்லாஹ் எல்லாம் ஒரு அளவுக்கு பயானுக்கு வரவங்க மதரஸாவுக்கு படிப்புகளுக்கு வரவங்களா இருக்கும் ஒரு பொதுவான ஒரு பள்ளிவாசல்ல வரக்கூடிய 50 வாலிபர்கள் கிட்ட குர்ஆனிலே எத்தனை அத்தியாயங்கள் இருக்கின்றன அதில் ஒரு 20 அத்தியாயங்களின் பெயர்களை எழுதுக ஷார்ட்டா ஒரு கேள்வி,

எவ்வளவு 20 அத்தியாயங்களில் பெயர்களை எழுதுக மக்கீ அத்தியாயங்களின் ஒரு ஐந்து பெயர்களை எழுதுக மதனி அத்தியாயங்களின் ஒரு ஐந்தின் பெயர்களை எழுதுக முதல்ல மக்கீனா தெரியுமா மதனினா தெரியுமா சொல்லுங்க நான் கேக்குறது புரியுதா குர்ஆன்ல மக்கி என்றால் என்ன மதனி னா என்னன்னு சொல்லி தெருவுல,

போய் ஒரு பஜார்ல போய் நில்லுங்க ஒரு முஸ்லிம் முஹல்லாவிலே போற வர வாலிபர்களை கூப்பிட்டு மக்கினா என்னப்பா மதனி னா என்னப்பா குர்ஆனில் என்று சமோசானா அவனுக்கு தெரியும் போண்டா என்றால் அவனுக்கு தெரியும் ஊர் சுத்துறதுனா தெரியும் பைக் ரேஸ் பண்றதுனா தெரியும் இல்லையா விளையாடுறதுனா தெரியும்,

மக்கீ மதனி அது என்ன மக்கீ மதனி அப்படிம்மா அவ்வளவு தான் நிலைமை குர்ஆன்ல முஹம்மது ரசூலுல்லாஹ் உடைய பெயர் சொல்லப்பட்ட அத்தியாயம் எது என்று கேளுங்கள் குர்ஆனில் மிக மகத்தான வசனம் உள்ள சூரா எது குர்ஆனில் மிக மகத்தான வசனத்தை தனக்குள் உள்ளடக்கிய அத்தியாயம் எது அர்ஷுடைய கஜானாவில் இருந்து நேரடியாக இறக்கப்பட்ட இரண்டு வசனங்களுடைய அத்தியாயம் எது குர்ஆனில் எந்த அத்தியாயங்களுக்கு முஹ்கமாத் எதை ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அதிகமாக இரவு தொழுகையிலே ஓதுவார்கள் என்ன தெரியும் சொல்லுங்க ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் விசேஷமா சொன்னாங்க,

اقْرَءُوا الزَّهْرَاوَيْنِ

அறிவிப்பாளர் : அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹா, நூல் முஸ்லிம் : எண் : 804 (4)

இரண்டு பூ கொத்துகளை நீங்கள் ஓதுங்கள் சூரத்துல் பகரா சூரத்துல் ஆல இம்ரானை ஓதுங்கள் நாளை மறுமையில் உங்களுக்கு சிபாரிசு செய்யக் கூடியதாக வரும் என்று சொன்னார்கள் எவ்வளவு சட்டங்கள் இருக்கின்றன சூரா பகராவிலே எவ்வளவு,

தவ்ஹீத் உடைய அடிப்படை இருக்கின்றன இந்த இரண்டு சூராவிலே யோசித்துப் பாருங்கள் வாங்க விஷயத்துக்கு அப்போ உமர் ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் என்ன சொன்னார்கள் அல்லாஹ் இந்த குர்ஆனை கொண்டு உயர்த்துவான் இந்த குர்ஆனை கொண்டு,

தாழ்த்துவான் யாரை உயர்த்துவான் இந்த குர்ஆனை கொண்டு யார் அல்லாஹ்வின் வேதத்தை பற்றி பிடித்தார்களோ யார் இந்த வேதத்திற்காக வாழ்கிறார்களோ அவர்களை அல்லாஹ் உயர்த்துவான் அவர்களை ஓங்க வைப்பான் அல்லாஹுதஆலா யார் இந்த குர்ஆனை விட்டு விட்டார்களோ அவர்கள் இழிவு அடைவார்கள் கேவலமடைவார்கள், அவர்கள் தோல்வி அடைவார்கள், முஸ்லிம்களுடைய தோல்வி நல்லா கவனமா கேட்டுக்கொள்ளுங்கள்,

தயவுசெய்து முஸ்லிம்களுடைய தோல்வி அவர்களுக்கு ஆட்சி இல்லாமல் போவதில் இல்லை முஸ்லிம்களுடைய தோல்வி அவர்களுக்கு படைபலம் இல்லாமல் போவதில் இல்லை சில பேரு பேசுவாங்க கிலாபத்து இல்ல அதனால தான் நம்ம வந்து வீழ்ச்சி அடைந்திருக்கோம் நம்ம ஜிஹாத் செய்யணும் ஜிஹாத் செய்யலன்னா நமக்கு வீழ்ச்சிதான் நீ என்ன ஜிஹாத் பண்ணுவ நீ எதை வைத்து ஜிஹாத் பண்ணுவ உனக்கு ஜிகாத்திற்கு உண்டான கிலாபத்திற்கு உண்டான என்ன தகுதி இருக்கிறது.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ

உங்களில் எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்தார்களோ அவர்களுக்கு அல்லாஹ் வாக்களித்துள்ளான். (அல்குர்ஆன் 24 : 55)

வசனத்தின் கருத்து: ஜிஹாதிருக்கு தகுதி கிலாஃபத்திற்கு தகுதி ஈமானும் அமலே சாலிகும் ஈமானும் அல்லாஹ் சொல்கிறான் ஈமானை கொண்டு வா அமலே சாலிகை கொண்டு வா நான் உனக்கு கிலாபத்தை தரேன்னு நான் சொல்றேன் அல்லாஹ் சொல்கிறான் ரப்பு சொல்கிறான் நீ ஈமானை கொண்டு வா நீ ஈமானை சரிபடுத்து அமலே சாலிகை கொண்டு வா நான் உன்னை கலீஃபாவாகிறேன் அல்லாஹ்வுக்கு என்ன ஆசையா நம்மள எல்லாம் கேவலப்படுத்தணும்னு

مَا كَانَ اللّٰهُ لِيَذَرَ الْمُؤْمِنِيْنَ عَلٰى مَاۤ اَنْـتُمْ عَلَيْهِ حَتّٰى يَمِيْزَ الْخَبِيْثَ مِنَ الطَّيِّبِ

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் இருக்கின்ற இதே நிலையில் நம்பிக்கையாளர்(களாகிய உங்)களை அல்லாஹ் விட்டுவிடுபவனாக இல்லை. (சோதனையின்) இறுதியாக நல்லவர்களிலிருந்து, தீயவர்களை பிரிப்பான். (அல்குர்ஆன் 3 : 179)

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

வசனத்தின் கருத்து: உங்கள அல்லாஹ் கஷ்டத்துல விடுறதுக்கு விரும்புவானா உங்களில் உண்மையானவர்கள் சுத்தமானவர்கள் யாரு கழிசடை யார் என்று அல்லாஹ் பிரிக்க விரும்புகிறான் இன்றைக்கு முஸ்லிம்களுடைய நிலைமை என்ன சொல்லுங்க பார்க்கலாம் தவ்ஹீதை லாயிலாஹ இல்லல்லாஹ்வை புரிந்தவர்கள் எத்தனை பேர்,

ஷிர்க்கை மார்க்கமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள் எதை ஷிர்க்கை காஃபிர்களுக்கு இறை மறுப்பாளர்களுக்கு சிலை வணங்கிகளுக்கு அவர்களுக்கு கோவில் இருக்கிறது என்றால் இன்று முஸ்லிம்களில் இருக்கக்கூடிய முஸ்லிம் என்ற பெயர் தாங்கிகளிலே,

இருக்கக்கூடியவர்களுக்கு தர்காக்கள் என்ற பெயரிலே கோயில் இருக்கு என்ன அதுவும் கோயில்தாங்க வேற எதுவும் கிடையாது தர்கா என்பது என்ன அது ஒரு கைண்ட் ஆஃப் கோவில் அது ஒரு கைண்ட் ஆஃப் சர்ச் அது அல்லாஹ்வைத் தவிர வணக்க வழிபாடுகள் எங்கு நடக்கின்றனவோ அவை சைத்தானின் கூடாரங்கள்,

சைத்தான் வணங்கப்படக்கூடிய இடங்கள் தர்காவுக்கு போறாங்களா அங்க போய் சுஜூது பண்றாங்களே அங்க போய் தவாப் செய்றாங்களே அங்க போய் நேர்த்தி செய்கிறார்களே அங்க போய் துவா கேட்கிறார்களே அவர்கள் அங்க அடக்கம் செய்யப்பட்டு இருக்கக்கூடிய அந்த அந்த மனிதரை அந்த இறை நேசரையா அந்த நல்லவரையா,

வணங்குகிறார்கள் அவர்கள் சைத்தானை வணங்குகிறார்கள் யாரை வணங்குகிறார்கள் சைத்தானை வணங்குகிறார்கள் எந்த ஒரு மூஃமினான மனிதரும் தன்னை வணங்குவதின் பக்கமோ தன்னுடைய இறப்புக்குப் பிறகு தன்னுடைய அடக்கஸ்தலத்தை புனித படுத்துவதின் பக்கமோ அங்கே வழிபாடுகள் செய்வதின் பக்கமோ அங்கே வந்து தங்குவதின்,

பக்கமோ அவர்கள் அழைக்கவே இல்லவே இல்லை புரியுதா இறை அடியார்கள் நல்லவர்கள் எதை சொன்னார்கள் எதன் பக்கம் அழைத்தார்கள் அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள் அல்லாஹுவை கொண்டு மக்களை அச்சுறுத்தினார்கள் சொர்க்கத்தின் பக்கம் அழைத்தார்கள் தொழுகையின் பக்கம் நோன்பின் பக்கம் அழைத்தார்கள் அந்த இறை நேசர்கள்,

இறந்ததற்குப் பிறகு அவர்களுடைய அடக்கஸ்தங்களை வைத்துக் கொண்டு வியாபார பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ஊரை மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் எப்படி சிலைகளை வைத்து பூசாரிகள் பாமர மக்களை மயக்கி கொண்டிருக்கிறார்களோ ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களோ அதுபோன்று இந்த தர்காக்களுடைய பூசாரிகள் யார் அவர்கள் பூசாரிகள் அவங்க யாரு ரியல் பூசாரி கோவிலுக்கு பூசாரி சர்ச்சுக்கு பூசாரி அதே போல தர்காவுக்கு பூசாரி அவங்க அவர்கள் புரோகிதர்கள் மக்களை ஏமாற்றுவதற்குரிய ஷைத்தானுடைய ஏஜென்ட்கள் அவர்கள்.

اِنَّ كَثِيْرًا مِّنَ الْاَحْبَارِ وَالرُّهْبَانِ لَيَاْكُلُوْنَ اَمْوَالَ النَّاسِ بِالْبَاطِلِ وَيَصُدُّوْنَ عَنْ سَبِيْلِ اللّٰهِ

நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக யூத, கிறித்தவ அறிஞர்களில் இருந்தும் இன்னும் துறவிகளில் இருந்தும் அதிகமானோர் மக்களின் செல்வங்களைத் தவறாக அனுபவிக்கிறார்கள். இன்னும், அல்லாஹ்வின் பாதையை விட்டு (மக்களை) தடுக்கிறார்கள். (அல்குர்ஆன் 9 : 34)

அல்லாஹ் சொல்கிறான் அதிகமான பாதிரிகள் துறவிகள் இவர்களெல்லாம் மக்களின் செல்வங்களை வாங்கி சாபிடுகிரர்கள். அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து மக்களை தடுக்கிறார்கள். என்ன செய்கிறார்கள் அநியாயமாக மக்களை ஏமாற்றி அவர்கள்,

சம்பாதிக்கிறார்கள். நீங்கள் நேராக முன்னால் வந்தால் ஆயிரம் ரூபாய் கொடுங்கள் ஐநூறு ரூபாய் கொடுங்கள் என்று கொடுபீர்களா? உங்க வீட்டில் வேலை செய்து விட்டு கூலி கேட்டால் பார்கிங் பண்ணுவீங்களா இல்லையா அதே,

நேரத்துல தர்காவுக்கு சென்றால் அவர் தன் கைமூலம் எதாவது செய்தல் அல்லது ஓதினால் ஆயிரம் ரூபாய் கொடுப்பீர்கள் நீங்க இல்ல சொல்ற அந்த தர்காவில் உள்ளவர் வா என்று சொன்னால் வா என்று சொல்லி எஜமான் எஜமான் என்று சொல்லுவார்கள்" யார் எஜமான் யாருக்கு யார் எஜமான்.

نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ

அவன் சிறந்த மவ்லா ஆவான். இன்னும், அவன் சிறந்த உதவியாளன் ஆவான். (அல்குர்ஆன் 8 : 40)

நமக்கு எஜமானன் யார் அல்லாஹ் எஜமானன் யாருக்கும் சுஜூது செய்கிறோமோ அவன் நமக்கு எஜமானன் அவன் சொல்றான் நான் உனக்கு மௌலா என்று சொல்லுகிறான். யார் சொல்றா நான் உன்னுடைய மௌலா என்று மௌலா அவராம் அவர் எஜமானா ஹஜ்க்கு போறதா இருந்தா அவர் கிட்ட கேட்டுட்டு போவானா நீ ஹஜ்ஜுக்கே போவேனா ஹஜ்ஜே கிடையாது முதல்ல நீ லப்பைக் சொல்வதற்கே தகுதி கிடையாது.

لبيك اللهم لبيك لبيك اللهم لا شريك لك لبيك ان الحمد والنعمه لك والملك لا شريك لك

என்ன தல்பியா தவ்ஹீதை உள்ளத்திலே ஏந்தாத உன்னுடைய தல்பியா தல்பியாவே கிடையாது மக்காவுடைய இணைவைப்பாளர்கள் என்ன செய்வார்கள் தல்பியா ஓதுவாங்க அவர்களும் ஹஜ் செய்வார்கள் செய்துவிட்டு இவ்வாறு கூறுவார்கள்.

لا شريك لك لا شريك هو لك تملكه أنت

அப்படின்னு சொல்லுவாங்க உனக்கு இணையே கிடையாது ஒரு சில இணை இருக்காங்க அவங்களுக்கும் நீதான் எஜமானேன்னு சொல்லிட்டு அவனாவது பரவாயில்லை யாரு மக்கா காபிர்கள் பரவாயில்லை இந்த தர்காக்களுடைய சாபுமார்களை விட ஏன்னா அவன் கூட என்ன விளங்கி இருந்தான் எல்லாத்துக்கும்,

மேல, யாருன்னு அல்லாஹ் இவங்க என்ன விளங்குறாங்க அல்லாஹ்வையே கண்ட்ரோல் பண்றவங்க இவங்கதானா எப்படி அல்லாஹ்வையே அல்லாஹ்ட்ட டைரக்டா கேட்டா கொடுக்கிற மாட்டான் இவங்க கேட்டா அல்லாஹ்,

கண்டிப்பா கொடுப்பான் அப்ப என்ன அர்த்தம் அதுக்கு என்ன எழுதி வச்சிருக்காங்க மௌலது கித்தாபுல அல்லாஹுத்தஆலா அப்துல் காதர் ஜீலானியை ரஹ்மத்துல்லாஹி அவர்களை பார்த்து அல்லாஹ் இவ்வாறு கூரினானம்.

நீங்கள் தான் எனக்கு ஏஜென்ட் யாரு அல்லாஹ் சொன்னதா சொல்கிறார்கள். அல்லாஹ் சொன்னால் எங்கே இருக்கனும் அது குர்ஆன்ல இருக்கணும் அல்லது எங்க இருக்கணும் ஸஹீஹான ஹதீஸ்ல இருக்கணும். அப்துல் காதர் ஜீலானிக்கு அல்லாஹ் சொன்னதா இவங்க எழுதி வைத்துள்ளார்கள்.

சொல்லுங்க பாக்கலாம் இதை விட குஃப்ரு என்ன இருக்க முடியும் சகோதரர்களே! நம்முடைய எழுச்சி தவ்ஹீதிலே இருக்கிறது லாயிலாஹ இல்லல்லாஹ் அதை புரிய வேண்டும், அதை செயல்படுத்த வேண்டும், அதன் பக்கம் மக்களை அழைக்க வேண்டும்.

இந்த தவ்ஹீத் இந்த குர்ஆன் நமக்கு ஒளி வெளிச்சம் இந்த வெளிச்சத்தை எல்லாம் அணைச்சிருங்க எதுவுமே இல்லைன்னு வச்சுக்கோங்க இஸ்லாம் என்ற ஒலி நம்மை பிரகாசமாக்கும் ஈமான் என்ற ஒலி தவ்ஹீத் என்ற ஒலி நம்மை பிரகாசமாகும் இந்த தவ்ஹீத் இல்ல சர்வ லோகம் கடன் எடுத்த முட்டாளாக ஆகிடுவோம்.

நம்மை அல்லாஹ் பாதுகாக்கணும் யாரெல்லாம் தங்களை முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டு இந்த தவ்ஹீத் இந்த ஈமான் இந்த குர்ஆனுடைய தவ்ஹீதை அவர்கள் எடுக்கவில்லையோ இந்த குர்ஆனுடைய தவ்ஹீதை எடுக்கவில்லையோ அவர்கள்தான் மடையர்கள் யார் அவங்க அல்லாஹுத்தஆலா எப்படி தெரியுமா கேட்கிறான் அதுக்கு தான் குர்ஆனை படிங்கன்னு சொல்றது அல்லாஹ் சொல்றான் குர்ஆனை படிங்கன்னு குர்ஆனை படிக்கல அதை ஓதல மண்டையில ஒண்ணுமே புரியாது.

قُلْ اَفَغَيْرَ اللّٰهِ تَاْمُرُوْٓنِّىْۤ اَعْبُدُ اَيُّهَا الْجٰـهِلُوْ

(நபியே) கூறுவீராக! ஆக, அறிவீனர்களே! அல்லாஹ் அல்லாதவர்களையா நான் வணங்க வேண்டும் என்று எனக்கு நீங்கள் ஏவுகிறீர்கள்? (அல்குர்ஆன் 39 : 64)

ஐஏஸ் படிச்சவன் ஐபிஎஸ் படிச்சவன் பிஎச்டி படிச்சவன் டாக்டர் படிச்சவன் எம்பிபிஎஸ் படிச்சவன் எல்லாம் முட்டாளும் வாங்கடா என்கிறான் யாரு எல்லா முட்டாளும் வாங்க அல்லாஹ் அல்லாதவரை நான் வணங்க வேண்டும் என்று முட்டாள்களே நீங்கள்,

எனக்கு சொல்கிறீர்களா யாரை அல்லாஹ் முட்டாள் என்கிறான் ஜாஹில் என்கிறான் யாருங்க ஜாஹில் அல்லாஹ் அல்லாதவரை வணங்கக் கூடியவர் ஜாஹில் யாரு அல்லாஹ் அல்லாதவரை வணங்கக் கூடியவர் ஜாஹில் அவருக்கு பின்னாடி எம் பி பி எஸ் போட்டுக்கிட்டாலும் சரி எம்எஸ் போட்டுக்கிட்டாலும்.

சரி என்ன டிகிரி போட்டாலும் சரி என்ன ஐஏஎஸ் ஐபிஎஸ் என்னென்ன உலகத்துல இருக்கோ அப்ஸோடு பல்கலைக்கழகத்தில் டிகிரி வாங்கிட்டு வந்து இருக்கட்டும் அதற்கு மேல எங்க இருக்கோ அங்கேயும் வாங்கிகிட்டு வந்துட்டோம்.

எல்லாம் இருந்தாலும் சரி நீ சர்வலோக முட்டாள் எது இல்லன்னா தவ்ஹீத் இல்லைனா இப்ப சொல்லுங்க யாருங்க கண்ணியமானவர்கள் யாரிடத்திலே அல்லாஹ் எழுச்சியை கொடுத்திருக்கிறான் யாரிடத்திலே அல்லாஹ் வெற்றியை கொடுத்து இருக்கிறான் கண்ணியத்தை கொடுத்து இருக்கிறான் உயர்வை கொடுத்திருக்கிறான்.

قُلْ اَفَغَيْرَ اللّٰهِ تَاْمُرُوْٓنِّىْۤ اَعْبُدُ اَيُّهَا الْجٰهِلُوْنَ

அல்லாஹுத்தஆலா சொல்கிறான்:

وَمَن يَرْغَبُ عَن مِّلَّةِ إِبْرَاهِيمَ إِلَّا مَن سَفِهَ نَفْسَهُ

பெரிய மடையனாக இருப்பவனைத் தவிர இப்ராஹீமுடைய (இஸ்லாம்) மார்க்கத்தை (வேறு) யார் வெறுப்பார்? (அல்குர்ஆன் 2 : 130)

தன்னைத்தானே மூடனாக மூடன்னா யாரு தெரியுமா கடஞ்சஎடுத்த முட்டாள் புத்தியை எங்க வச்சிருப்பான் மண்டையில வச்சி இருக்க மாட்டான் முட்டு கால்ல வச்சிருப்பான் என்று சொல்வார்களே கடைஞ்செடுத்த தவிர வேறு யாராவது இப்ராஹீம் உடைய தவ்ஹீத் கொள்கையில் இருந்து விலகி செல்வானா அப்படின்னு அல்லாஹ் கேட்கிறான் இன்றைக்கு முஸ்லிமுடைய நிலையை பாருங்கள்.

இந்த தவ்ஹீதை சொல்ல போனால் வஹாபி என்று சொல்கிறார்கள் என்ன சொல்றாங்க பேரு வஹாபி என்று சொல்கிறார்கள் எதற்கு இந்த விஷயத்தை இடையில் கொண்டு வந்தனா வர்றதுக்கு முன்னாடி தான் ஒரு கிளிப் பார்த்தேன் யாரோ,

ஒருத்தர் நாகூர் தர்காவுக்கு அது என்ன ஸ்ரீரிலங்கால இருந்து வராரு அவருக்கு எஜமான் போர்வை போர்த்துறாங்க எஜமான் போர்வை போர்த்திட்டு நீங்கதான் இந்த வஹாபியை ஒழிக்கணும் உங்களால தான் வஹாபியத் ஒளிஞ்சி இஸ்லாம் பாதுகாப்பா இருக்குதாம் எது இஸ்லாம் அல்லாஹ் அல்லாதவரை வணங்குவது இஸ்லாமா ஒரு முஷிரிக்கிட்ட ஒரு காஃபிர்கிட்ட போய் கேட்டா கூட முஸ்லிம்கள் என்றால் யார் என்று அவங்க ஒருத்தவனை வணங்குவாங்கன்னு சொல்லுவான் ஒரு சிலை வணங்கிகிட்ட போயி முஸ்லிம் நா யாருன்னா அவங்க என்ன சொல்லுவாங்க ஓர் இறையை வணங்கக் கூடியவர்கள் என்று சொல்வார்கள்.

இவன் சொல்றான் யாரு ஓர் இறை வணங்க கூடியவர்களை அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணக்கத்திற்குரியவன் என்று அல்லாஹ்வை அழைப்பவர்களை இவங்க என்ன சொல்றாங்க அவங்க முஸ்லிம் இல்லையாம் இவங்க எல்லாம் யாரு நம்மெல்லாம்,

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

என்ன இல்லையா நம்மள முஸ்லீம் இல்லையா நம்ம எல்லாம் வஹாபியாம் அது என்னடா வஹாபி எங்களுக்கு வஹாபி னா என்னன்னே தெரியாது எங்களுக்கு எதற்கு வஹாபி எங்களுக்கு எதுக்குங்க வஹாபி நீ எங்களுக்கு குர்ஆன் ஆயத்தை காட்டு நீ!

எங்களுக்கு குர்ஆன் ஆயத்தை காட்டு இங்க இருக்கு குர்ஆன் ஆயத்துல இறந்து போன அவுலியாக்களை வணங்க சொல்லி அவங்ககிட்ட துவா கேட்க சொல்லி அப்படின்னு ஒரு ஆயத்தை காட்டு ஒரு ஹதீஸை காட்டு இல்ல நாங்க உங்களுக்கு காட்டுறோம் நூறு ஆயத்தை,

وَّاَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا

இன்னும் நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்விற்கு உரியன. ஆகவே, அல்லாஹ்வுடன் வேறு ஒருவரை வணங்காதீர்கள்! (அல்குர்ஆன் 72 : 18)

வசனத்தின் கருத்து: அல்லாஹ் சொல்றான் மஸ்ஜித் என்னுடைய மஸ்ஜிதுடா என்னை தவிர யாரையும் அழைக்காதீர்கள் என்று சொல்கிறான் நீ இங்க உட்கார்ந்துகிட்டு யா கவுஸ் யா கவுஸ் சொல்ற யா ஹாஜா முராதுங்குற யார் காதர் ஷரீப் முராதுங்குற அப்ப எதுக்கு நீ

اياك نعبد واياك نستعين

ஓதுற அப்ப எதுக்கு நீ ربنا اتنا ஓதுற அப்துல் காதர் ஜீலானி ஆத்தினா பித்துன்யா ஆசனானு ஓத வேண்டியதுதானே அப்ப எதற்கு அல்லாஹுவே ரப் என்கிற புரியுதா உங்களுக்கு நூறு ஆயத்து அல்லாஹ் சொல்கிறான்.

ادْعُوْنِىْۤ اَسْتَجِبْ لَـكُمْ

என்னை அழையுங்கள் நான் பதில் தருகிறேன் அப்படிங்கிறான்.

إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِنْ دُونِ اللَّهِ عِبَادٌ أَمْثَالُكُمْ فَادْعُوهُمْ فَلْيَسْتَجِيبُوا لَكُمْ

இன்னும், உங்கள் இறைவன் கூறுகிறான்: “என்னிடம் பிரார்த்தியுங்கள்! நான் உங்களுக்கு (உங்கள் பிரார்த்தனையை) அங்கீகரிப்பேன். நிச்சயமாக எனது வணக்க வழிபாடுகளை விட்டு பெருமை அடிப்பவர்கள் சிறுமைப்பட்டவர்களாக விரைவில் நரகத்தில் நுழைவார்கள்.”(அல்குர்ஆன் 40 : 60)

நிச்சயமாக அல்லாஹ்வை அன்றி நீங்கள் யாரிடம் பிரார்த்திக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்றே (அல்லாஹ்வின்) அடிமைகள் ஆவார்கள்.

அல்லாஹ்வைத் தவிர நீங்கள் அழைப்பவர்கள் எல்லாம் உங்களைப் போல என்னுடைய அடியார்கள்தான் என்னுடைய அடியார்கள் தான் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது எத்தனை வசனம் இருக்கு ஓதி பாருங்க அல்லாஹ் சொல்றான் சரி அழைச்சு பாரேன் பதில் கொடுக்கிறார்களா என்று பாருங்கள்.

அழைத்துக் காட்டு அவர்கள் பதில் அளிப்பார்களா என்று பார்க்கிற நானும் என்கிறான் அல்லாஹுத்தஆலா டேய் அழைத்து காட்டுடா யார் உனக்கு பதில் அளிக்கிறார்கள் என்று பார்ப்போம்

اَحْيَآءٍ غَيْرُ اَمْوَاتٌ

(அல்லாஹ்வை அன்றி வணங்கப்படுகின்ற இந்த சிலைகள்) இறந்தவர்கள்; உயிருள்ளவர்கள் அல்லர். இன்னும், (தாம்) எப்போது (மறுமையில்) எழுப்பப்படுவோம் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 16 : 21)

எல்லாரும் மௌத்தா போயிட்டாங்களே யாரும் உயிராக இல்லையே யாறை அழைக்கிறிர்கள் எப்படி கேட்கிறான் அல்லாஹ் செத்துப் போனவர்களை அலைக்க்ரிர்கள் ஏன் உன் அறிவு சிந்திக்க வில்லை. இதெல்லாம் யாருக்கு அல்லாஹ் இறைக்க்கினான்? இதை  இஸ்லாத்துக்கு வெளிய இருக்கிற முஷிரிக்குக்கு அல்லாஹ் இறக்கினான்.

இன்றைக்கு அது யாருக்கு ஓத வேண்டியதா இருக்கு யாருக்கு இப்போ நம்ம ஓத வேண்டியதா இருக்கு முஸ்லிம்களுக்கு ஓத வேண்டியதா இருக்கு ஏன் இந்த குர்ஆனை விட்ட காரணத்தானமாக, ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவங்க மரண நேரத்தில் இருந்தாங்க நம்முடைய நபி மவுத்தா போற நேரத்துல இருந்தாங்க உம்மு ஸலாமா ரழியல்லாஹு அன்ஹா உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா இவர்களெல்லாம் ரசூலுல்லாவுடைய மனைவிமார்கள்.

இவர்களெல்லாம் ஹபஷா ஹிஜ்ரத் செய்து போயிட்டு வந்திருக்காங்க அப்பொழுது உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா எல்லாம் உட்கார்ந்து பேசுகிறார்கள் இந்த மாதிரி நாங்க அபஷா பெயருக்கும்போது அங்க சர்ச் எல்லாம் பார்த்தோம் அங்க நிறைய உருவ படங்கள் எல்லாம் வரஞ்சு வச்சிருந்தாங்க அப்படின்னு சொல்லி பேசிக்கிட்டு இருந்தாங்க ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அப்படியே பாதி மயக்கத்திலே ஏன்னா உடம்பு வேற சரியில்லை தலைவலி காய்ச்சல் சக்கராத்து நேரம் வேற கொஞ்சம் சுதாரிப்பு வந்த உடனே உஷார் வந்தவுடனே உடனே சரியான கோவத்துல சரியான கோவத்துல ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள் என்ன சொன்னார்கள்.

لَعْنَةُ اللَّهِ عَلَى اليَهُودِ وَالنَّصَارَى، اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ

யூதர்கள் மீது யஹூதிகள் மீது நஸ்ராணிகள் மீது அல்லாஹ்வுடைய சாபம் இறங்கட்டும். தங்களுடைய நபிமார்களுடைய கபூர்களை சுற்றி மஸ்ஜிதுகளை ஏற்படுத்தினார்கள்.

அறிவிப்பாளர் : அப்துல்லஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் புகாரி : எண்: 3453 (5)

கவனிங்க நல்லா கவனிங்க யூதர்களை நஸ்ராணிகளை ரசூலுல்லாஹி  சபித்தார்கள் எதற்காக நபிமார்களுடைய கபூரை சுத்தி மஸ்ஜிது கத்தி அந்த மஸ்ஜிதுல போய் தொழுது அல்லாஹ்வுக்கு ரொம்ப பிரியமா இருக்கும் அல்லாஹ்வை தொழுததற்கு ரசூலுல்லா யூதர்களை சபிக்கிறார்கள் இங்க இங்கே என்ன நடக்குது அல்லாஹ்வுடைய அடியார்கள் இறந்ததற்குப் பிறகு அல்லாஹ்வுடைய அடியார்கள் இருந்ததற்கு பிறகு அவர்களுடைய அடக்கஸ்தலங்களை மஸ்திதா மாத்தி ஒரு வழிபாட்டு தலமா மாத்தி யார வழிபாடு செய்றாங்க யார அங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பவரையே

வழிபடுகிறார்கள் சொல்லுங்கள் பார்க்கலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொல்கிறார்கள். அவங்க என்ன தெரியுமா செய்வாங்க.

فَقَالَ: أُولَئِكِ إِذَا مَاتَ مِنهمُ الرَّجُلُ الصَّالِحُ بَنَوْا عَلَى قَبْرِهِ مَسْجِدًا، ثُمَّ صَوَّرُوا فِيهِ تِلْكَ الصُّورَةَ أُولَئِكِ شِرَارُ الخَلْقِ عِنْدَ اللَّهِ

ஒரு நல்ல மனிதர் இறந்து விட்டால் அவர்களுடைய கபூரை சுத்தி மஸ்ஜித் கட்டி விடுவார்கள் அதிலே அந்த நல்ல மனிதருடைய உருவங்களை வரைந்து வைப்பார்கள் அல்லாஹ்வுடைய படைப்புகளிலேயே மிக மோசமான கெட்டவர்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் புகாரி : எண் : 1341

சொல்லுங்க பார்க்கலாம் இப்படி உம்மத்தில் ஒரு பக்கம் முஷிறிக்கு உம்மத்துல ஒரு பக்கம் முஷிறிக்குகள் இன்னொரு பக்கம் இல்மானி இல்மானினா இஸ்லாமை மஸ்ஜிதுக்குள்ள மட்டும் வைங்க எங்க பிசினஸுக்கு சொல்லாதீங்க இஸ்லாமை எப்படி ஒரு கூட்டம் இருக்கு தொழுவாங்க ஓகே வி ஆர் ரெடி டு ப்ரே ஏம்பா,

வட்டி வாங்காத அதெல்லாம் முடியுமாங்க ஏம்பா இதெல்லாம் செய்யாதே அதெல்லாம் முடியாது இந்த காலம் வேற அந்த காலம் வேறங்க யார் அவர்கள் இஸ்லாம் மஸ்ஜிதுக்கு மட்டும் பொருத்தமானது வெளி வாழ்க்கைக்கு இஸ்லாம் பொருந்தாது என்று சொல்லக்கூடிய செக்குலர் சிந்தனைவாதிகள்.

செக்குலர் சிந்தனைவாதிகள் அல்லாஹ்வுடைய சட்டத்தைவிட அல்லாஹ்வுடைய மார்க்கத்தை விட பிற சட்டங்கள் மனிதர்கள் உருவாக்கிய சட்டங்கள் இந்த காலத்திற்கு தோதுவானது என்று சொல்லக்கூடியவர்கள்.

உங்களுக்கு ஒன்னு தெரியுமா யார் இந்த செக்யூலரை உருவாக்கினாங்களோ யார் இந்த சட்டங்களை உருவாக்கினார்களோ அவர்கள் சொல்றாங்க நாங்க தோத்து போயிட்டோம் அவங்க என்ன சொல்றாங்க நாங்க தோத்து போயிட்டோம் வேஸ்ட் ஆயிட்டோம்.

எங்களுடைய சட்டங்கள் எல்லாம் குப்பை அப்படின்னு சொல்லிட்டு லண்டன்ல போய் பார்த்தா அங்க இஸ்லாமிக் பேங்க்ல கூட்டம் இருக்கு வட்டிக்கு கொடுக்கிற பேங்க்ல கூட்டமே இல்லை போகவும் மாட்டிக்கிறான் எவனுமே எங்க சிஸ்டம் தோற்றுப் போச்சு அப்படிங்கிறான் அவன் இஸ்லாத்திற்கு வரான் இப்போ இவன் குப்ருக்கு போயிட்டு இருக்கான்.

யாரு வெஸ்டர்ன் எத நோக்கி வராங்க எங்களுடைய பெண்களுக்கு நாங்கள் அநீதி இழைத்து விட்டோம் எங்களுடைய பிள்ளைகளுக்கு நாங்கள் அநீதி இழைத்து விட்டோம் எங்களை நாங்கள் அழித்துக் கொண்டோம் எங்களை நாங்கள் நாசமாக்கி விட்டோம்.

என்று சொல்லி அவர்கள் இப்போ நம்மள பார்த்து பார்த்து இத மாத்துவோம் என்று சொல்லி ஆமா மாத்த வரான் இப்போ இவன் ஓடுறான் அவன் பக்கம் அல்லாஹுத்தஆலா நமக்கு உயர்வான சிறப்பான இந்த மார்க்கத்தை கொடுத்தான் இங்க பாருங்க நம்முடைய மஜ்லிஸ் உடைய தலைப்பு என்ன முஸ்லிம்களுடைய எழுச்சி, வீழ்ச்சி இங்க பாருங்க ஒரு சம்பவத்தை அல்லது இரண்டு சம்பவத்தை சொல்லி முடிக்கிறேன்.

நமக்கு புரிய மாட்டேங்குது இந்த இஸ்லாமை அணைக்க மாட்டிக்கிறோம் ஒதுக்கி ஒதுக்கி வைக்கிறோம் குர்ஆனை தூரமா வைக்கிறோம்.

அதிசய தூரமா வைக்கிறோம் தூரத்தில் இருந்து மட்டும் பார்த்துக்க தயார் எப்படி சில பேரு மையத்து வீட்டுக்கு வந்தாங்கன்னா அப்படியே தூரத்தில் இருந்து பார்ப்பாங்க பயம் மவுத்தா போனவரை பார்த்தா என்னடா பயம் மவுத்துனாலே பயம் மௌத்தை விரும்பாத வரை ஈமான் முழுமையாகாது என்னங்க மௌத்தை நேசிக்கணும் மௌத்தை வெறுப்பவர்கள் யார் தெரியுமா? அல்லாஹ் சொல்றான் யஹூதி நஸராணிகள் தான் மௌத்தை வெறுப்பான்,

يُعَمَّرَ اَنْ الْعَذَابِ مِنَ بِمُزَحْزِحِهِ هُوَ وَمَا سَنَةٍ لْفَ اَ يُعَمَّرُ لَوْ اَحَدُهُمْ يَوَدُّ

யகூதி நஸ்ராணிகள் தான் ஆயிரம் வருஷம் வாழனும் துன்யாவுலன்னு ஆசைப்படுவான் அவன் ஆயிரம் வருஷம் வாழ்ந்தாலும் என்ன நரகத்தை விட்டு தப்பிக்க முடியாது என்கிறான் அல்லாஹுத்தஆலா. (அல்குர்ஆன் 2 : 96)

مُلَقِيْكُمْ فَاَنَّهُ مِنْهُ تَفِرُّوْنَ الَّذِىْ الْمَوْتَ اِنَّ قُلْ

மரணத்தைப் பார்த்து விரண்டு ஓடுறவன் யஹூதி நஸரானின்னு அல்லாஹ் சொல்றான் சொல்றானா இல்லையா ஓதுரமா இல்லையா சூராவை ஜும்ஆவிலே. (அல்குர்ஆன் 62 :8)

قُلْ يَاأَيُّهَا الَّذِينَ هَادُوا إِنْ زَعَمْتُمْ أَنَّكُمْ أَوْلِيَاءُ لِلَّهِ مِنْ دُونِ النَّاسِ فَتَمنوُا الْمَوْتَ إِنْ كُنْتُمْ صَادِقِينَ وَلَا يَتمنونَهُ أَبَدًا بِمَا قَدَّمَتْ

أَيْدِيهِمْ وَاللَّهُ عَلِيمٌ بِالظَّالِمِينَ

(நபியே!) கூறுவீராக! "யூதர்களே! நிச்சயமாக நீங்கள்தான் அல்லாஹ்வின் நண்பர்கள், மற்ற மக்கள் அல்ல, என்று நீங்கள் பிதற்றினால், நீங்கள் (உங்களது இந்த கூற்றில்) உண்மையாளர்களாக இருந்தால் மரணத்தை ஆசைப்ப(ட்டு காட்)டுங்கள்"! (அல்குர்ஆன் 62 : 6)

நீ அல்லாஹ்வுக்கு நேசமான நண்பன்னு சொல்றீங்களே கொஞ்சம் மவுத்த ஆசைப்படுங்களேன் மௌத்தை ஆசை படுங்களேன் என்கிறான் அல்லாஹ் சொல்றான்.

மௌத்தை அவர்கள் அறவே விரும்பவே மாட்டார்கள் ஏன்னா அவ்வளவு அநியாயம் பண்ணி வச்சிருக்காங்க அவ்வளவு பாவம் பண்ணி வச்சிருக்கானுங்க அல்லாஹ் சொல்றான் இந்த அநியாயக்காரர்களை அல்லாஹ் அறிந்தவனாக இருக்கிறான்.

ஒரு முஃமின் மட்டும்தான் மௌத்தை வரவேற்பான் வரவேற்பான் அல்லாஹ்விடத்தில் மௌத் வரும் பொழுது சந்தோசமா மௌத்தா போவான் மூஃமின் மவுத் வா வா துவா செய்றது இல்ல மவுத் வருதுன்னு தெரிஞ்சா என்ன செய்வான் சந்தோஷமா அதை ஏத்துப்பா பயப்பட மாட்டான் அல்லாஹ் கிட்ட போறேன்னு அவனுக்கு சந்தோஷம் அல்லாஹ்வுடைய அன்பளிப்பாக.

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

இந்த இஸ்லாம் இந்த தீன் அல்லாஹுத்தஆலா இதன் மூலமாக நம்மை உயர்த்தி இருக்கிறான் நம்மை முஸ்லிம் என்று அடையாளப்படுத்துவது, ஐந்து நேர தொழுகைகளை தொழுவது, குர்ஆன் ஓதுவது, திக்குரு செய்வது, ஜக்காத் கொடுப்பது, தர்மம் செய்வது, நல்ல காரியங்கள் செய்வது, தன்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டே இருப்பது, அடையாளப்படுத்திக் கொண்டே இருப்பது.

وَمَنْ اَحْسَنُ قَوْلًا مِّمَّنْ دَعَاۤ اِلَى اللّٰهِ وَعَمِلَ صَالِحًا وَّقَالَ اِنَّنِىْ مِنَ الْمُسْلِمِيْنَ

யார் அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, தானும் நல்லமலை செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுவாரோ அவரைவிட பேச்சால் மிக அழகானவர் யார்? (அல்குர்ஆன் 41 : 33)

நாங்கள் முஸ்லிம்கள் நாங்கள் முஸ்லிம்கள் தங்களுடைய இஸ்லாமிய சொல்லிக் கொண்டே இருப்பான் அதன் பக்கம் அழைத்துக் கொண்டே இருப்பான் தன்னுடைய அடையாளத்தை மாற்றவே மாட்டான்.

நமக்குன்னு தனி ஹேர் கட் நமக்குன்னு தனி டிரஸ் கோட் இவர் பார்த்தா இவர் பாய்ங்க இவர் தொழுகையாளி இவர் ஒரு முஸ்லிமுங்க சில பேரு முடி வெட்டிட்டு வருவாங்க பசங்க நான் கேட்பேன் என்னப்பா பாதியிலேயே,

எந்திரிச்சு ஓடி வந்துட்டியானு சொல்லிட்டு பாதியிலேயே முடி வெட்டிக்கிட்டே இருக்கும் போது பாதியிலேயே எந்திரிச்சு ஓடி வந்துட்டா எப்படி இருக்கும் இந்த பக்கம் வெட்டி இருக்கும் இந்த பக்கம் வெட்டாமல் இருக்கும் என்னமோ தெரியல யாரைப் பார்த்து எல்லாம் காப்பி நஜீஸ் அல்லாஹ் என்ன சொல்றான்.

قُلْ هَلْ اُنَبِّئُكُمْ بِشَرٍّ مِّنْ ذٰ لِكَ مَثُوْبَةً عِنْدَ اللّٰهِ مَنْ لَّعَنَهُ اللّٰهُ وَغَضِبَ عَلَيْهِ وَجَعَلَ مِنْهُمُ الْقِرَدَةَ وَالْخَنَازِيْرَ

(உலகில் அல்லாஹ்வை பயந்தவர் செய்த) நல்லதுக்குக் கூலி (மறுமையில் அல்லாஹ் அவருக்கு கொடுக்கின்ற சொர்க்கம் என்ற) நல்லதைத் தவிர வேறு உண்டா? (அல்குர்ஆன் 5 : 60)

அல்லாஹ் சொல்றான் இந்த ஏகூதி நஸராணி யார் தெரியுமா? கேடு கெட்டவர்கள் என்று சொல்கிறான் அல்லாஹுத்தஆலா சபித்திருக்கிறேன் அவர்கள் மீது கோபப்பட்டு இருக்கிறேன் அவர்களை குரங்குகளாக பன்றிகளாக மாற்றி இருக்கிறேன் என்று அல்லாஹ் சொல்கிறான்.

அவனைப் பார்த்து இவன் ஹேர்கட் பண்ணிக்கிட்டு இருக்கான் அவன பாத்து பேண்ட் போடுறா கிழிச்சுகிட்டு நல்ல பேண்ட் எல்லாம் கிழித்து விட்டு இருக்காங்க ஒருத்தரை பார்த்து என்னங்க டிரஸ் ரொம்ப இதா இருக்குதே ஏதாவது ஒரு நல்ல பேண்ட் வாங்கிக்கோங்க ஹஸ்ரத் இதுதான் மாடல் ஹஜரத் அங்கங்க கிழிச்சு விட்டுகிட்டு முன்னாடி எல்லாம் தொப்புளுக்கு மேலே இருக்கும்.

பேண்ட் இப்ப எல்லாம் இடுப்புக்கு கீழே பாதிக்கு கீழ இருக்குது பேண்ட் என்னன்னு கேட்டா மாடல் என்கிறான் அஸ்தஃபிருல்லாஹ் கன்றாவியா இருக்குது நம்ம பசங்கள பார்த்தா அசிங்கமா இருக்குது பெண்பிள்ளைகள் ஒரு பக்கம் ஆண் பிள்ளைகள் ஒரு பக்கம் அல்லாஹ் பாதுகாக்கணும்.

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

இப்போ என்னன்னா அல்லாஹுத்தஆலா நமக்கு எதைக் கொண்டு கண்ணியத்தை கொடுத்து இருக்கிறான் இஸ்லாமிய கொண்டு ஈமானை கொண்டு தவ்ஹீதை கொண்டு சுன்னாவை கொண்டு உமர் ரலியல்லாஹு அன்ஹு ரொம்ப பிரபலமான சம்பவம் அவர்கள்,

சுபஹானல்லாஹ் சாதாரண டிரஸ் அவங்க ஃபேலஸ்டைனுக்கு வராங்க ஃபேலஸ்டையை வெற்றி கொண்டாச்சி அபூ உபைதா உடைய படை போனாங்க எல்லாம் வெற்றி கொண்டாச்சி இப்ப அந்த பாதிரிகள் என்ன சொல்றாங்கள் சரி நீங்க வெற்றி கொன்றுவிட்டீர்கள் வெற்றியாளர்களாக ஆகிட்டீங்க மஸ்ஜித் அக்சா உடைய சாவியை கொடுத்து விடுகிறோம்.

ஆனால் எங்களுக்கு தவ்ராத் இஞ்சிலுடைய கணக்குப்படி எங்களுக்கு நாங்கள் வாக்களிக்கப்பட்டவர்கள் எப்படி என்று சொன்னால் முஸ்லிம்களுடைய கலீபா வந்து இந்த சாவியை வாங்குவார் என்று எங்களுக்கு கலிபாவை கொண்டு வாங்க சாவி கொடுக்கிறோம் என்று கலீபாவை மதீனாவிலிருந்து கொண்டு வரணுமே எல்லாத்தையும்.

கொண்டு வந்து காட்டுனா இவரு கலீபா மாதிரி இருக்காரு ஆனா கலிப்பா இல்லைன்னுட்டாங்க அந்த அளவுக்கு சஹாபாக்களை பற்றி அல்லாஹுத்தஆலா எதில் சொல்லி இருக்கான் தவ்ராத் இஞ்சில சொல்லி இருக்கான் நம்ம தவ்ஹீத் என்கிற பெயரில் தறுதல இருக்கும்.

என்ன பேர்ல தவ்ஹீத் என்கிற பெயரில் தறுதலை இருக்கும் அந்த தறுதலைக்கு சகபாக்கள்னால எரியும் அவங்களுக்கு என்ன சஹாபாக்கள்னாலே எரியும் அவங்களுக்கு சஹாபாக்கள்னாலே மூஞ்சி சுருங்கி போயிடும் முஸ்லிம் முஃமின்களுக்கு சஹாபாக்கள் என்று சொன்னால் சந்தோஷமாக இருக்கும்.

ஏன் அல்லாஹ் சஹாபாக்களை சந்தோசமா பேசுறான் குரான்ல ஓதிக்கிட்டே இருக்கிறான் அல்லாஹுத்தஆலா ஸஹாபாக்களை பற்றி ஆயத்து ஆயத்த ஓதி ஓதிக்கிட்டே இருக்கான்.

أُولٰٓـئِكَ هُمُ الْمُؤْمِنُوْنَ حَقًّا

அவர்கள்தான் உண்மையில் நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 8 : 4)

அவர்கள் தான் உண்மையான மூமின்கள் அவங்க பின்னாடி போங்கடா என்கிறான் ஒரு கூட்டத்திற்கு குடிக்க மாட்டிக்குது சஹாபாக்கள் அது என்ன பெரிய அவங்க பெரியவங்க தான்டா அவர்களை விட நீ பெரிய ஆளா ஆகிவிட முடியுமா அல்லாஹ்விடத்திலே,

நீ ஏதோ கொண்டுட்டு போயிடுவ அல்லாஹ்விடம் தவுராத்துல சொல்லப்பட்டிருக்கா எல்லாத்தையும் எங்களுக்கு கலிபா யாரோ அவங்கள கூட்டிட்டு வாங்க வேற வழியே இல்லை கலிபாவுக்கு செய்தி போது சேரின்னு வராங்க உமருள் பாரு அந்த வரக்கூடிய பயணமே ஒரு பெரிய வரலாற்றுப் பயணம் அல்லாஹ் அக்பர் வந்தா டிரஸ் உமர் ரலியல்லாஹு அன்ஹு,

அவங்க கிட்ட வந்து வேற விஷயம் அவங்க மொத்தமே வந்து ஒரு டிரஸ் தான் வச்சிருப்பாங்க சும்மா ஒரு துணி வச்சிருப்பாங்க மாத்திக்கிறதுக்கு வெள்ளிக்கிழமையில் கூட அந்த டிரஸ்ஸ துவைத்து போட்டுட்டு காய வச்சுட்டு திரும்ப அதான் போட்டுக்கிட்டு வருவாங்க அதுல வேற ஒட்டு இருக்கும் அத

தச்சி இருப்பாங்க அப்போ அந்த ஃபாலஸ்த்தின் வரத்திற்கு முன்னாடி நீங்க போனீங்கன்னா ஜியாரதிற்கு போனீங்கன்னா,

அந்தப் பள்ளி எல்லாம் காட்டுவாங்க அந்த இடத்திற்கு வந்த உடனே போய் சந்திச்சு அவங்கள அங்க தங்க வச்சுட்டு நைசா பேசுறாரு அமீருல் முஃமினீன் இந்த மக்கள் கொஞ்சம் ஆடம்பரத்தை விரும்புறவங்க இந்த கோர்ட் சூட் பந்தா பெரிய ஆளு அவங்க ராஜாக்கள் எல்லாம் எப்படி இருப்பாங்க சோ கொஞ்சம் உங்க டிரஸ் மாத்திக்கிட்டா என்ன நான் உங்களுக்காக டிரஸ் கொண்டுட்டு வந்து இருக்கேன் அல்லாஹ் அக்பர் என்ன தெரியுமா,

வார்த்தை சொன்னாங்க அபூ உபைதா இந்த வார்த்தையை மட்டும் வேற ஆளு சொல்லி இருந்தாங்க அவர் முதுகில் சாட்டையால் அடித்து இருப்பேன் வேறு யாரும் சொல்லி இருந்தா என்ன அபூ உபைதா நீங்க சொல்றீங்க அல்லாஹ் நமக்கு இந்த ட்ரெஸ்ஸை கொண்டா கண்ணியம் கொடுத்தான் என்ன சொல்றீங்க இந்த டிரஸ்சை கொண்டா அல்லாஹ் நமக்கு கண்ணியத்தை கொடுத்தான். நாம் யார் தெரியுமா?

فأعزَّنا الله بالإسلام فمهما نطلب العِزَّة بغير ما أعزَّنا الله به أذلَّنا الله

இஸ்லாமை கொண்டு அல்லாஹ் நமக்கு கண்ணியத்தை கொடுத்தான் அல்லாஹ் எதை கொண்டு கண்ணியத்தை கொடுத்தானோ அது அல்லாத ஒன்றிலே யார் கண்ணியத்தை தேடுவார்களோ அவர்களை அல்லாஹ் இழிவு படுத்தி விடுவான் எனக்கு இது வேணும் அது வேணும் எல்லாம் வேணும் தாங்க காலுக்கு செருப்பு எப்படி வேணுமோ,

அப்படித்தான் அதெல்லாம் வேணும் தாலுக்கு ஏங்க சுவாசிப்பதற்கு உயிர் வாழ்வதற்கு சுவாசிப்பதற்குரிய வாழ்வதற்கு காற்று தேவையில அந்த காற்றும் காலுக்கு போடுவதற்குரிய செருப்பும் சமமாகுமா? செருப்பு தேவைதானே தேவையில்லை.

என்று சொல்வீர்களா? செருப்பு தேவையா இல்லையா செருப்பு தேவை தான் உயிர் வாழ்வதற்கு ஆக்சிஜன் காற்று தேவ தான் இரண்டும் சமமா சகோதரர்களே இஸ்லாம் நமக்கு உயிர் மூச்சு காற்றை போல இஸ்லாம் நமக்கு குர்ஆன் நமக்கு உயிர் மூச்சு காற்றை போல அல்லாஹ்வுடைய நபி உடைய சுன்னா நமக்கு உயிர் மூச்சு காற்றைப் போல நம்முடைய கலாச்சாரம் நம்முடைய ஈமான் நம்முடைய ஹிதாயத் நம்முடைய தொழுகை நம்மளுடைய வணக்க வழிபாடு இது நமக்கு உயிர் மூச்சு காற்றை போல இந்த துன்யா நமக்கு செருப்பு போல இந்த காசு பணம் படிப்பு இந்த ஆட்சி அதிகாரம் இந்த சொத்து சுகம் இதெல்லாம்.

நமக்கு செருப்ப போல செருப்பு வேணும் தான் ஆனா அதற்காக வேண்டி உயிர் மூச்சு விட முடியுமா தீனா விட முடியுமா இஸ்லாமை விட முடியுமா யகீனை விட முடியுமா அல்லாஹ்வுடைய சட்டத்தை மாற்றிட முடியுமா சமரசம் பண்ணிக்க முடியுமா,

எதுல வேணாலும் சமரசம் வேணாங்க துன்யாவே எங்களுக்கு தீன் இருந்தா போதுங்க அதை சொல்றதுக்கு தானங்க லாயிலாஹ இல்லல்லாஹ் அத சொல்றதுக்கு தானே நபிமார்கள் வந்தாங்க நீ

என்ன செய்ற தீனு அது இருக்கட்டும் ஓரமாக வைத்துகொள்ளலாம். உலக வலக்கையைக் கொண்டு வாங்க என்கிறோம் தீன் போகுதே பரவாயில்லை.

தவ்ஹீது போகுதே பரவாயில்லை இஸ்லாம் போவதே பரவாயில்லை சுன்னா போகுதே பரவாயில்லை எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை எங்களுக்கு துணியா வேணும் உன்ன வெச்சி என்ன செய்ய முடியும் குப்பை தான் நீயும் குப்பை உன்னுடைய கொள்கையும் குப்பை ஒண்ணுத்துக்கும் ஆவாது,

கேவலத்துக்கு மேல கேவலம் இழிவுக்கு மேல் இழிவு என்ன செய்ய முடியும் முஸ்லிம் தைரியமா நின்னு அல்லாஹ் அக்பர் லாயிலாஹ இல்லல்லாஹ் அஸ்ஸலாமு அலைக்கும்மு சொல்லுவான் இல்லனா அப்படிங்களா வாங்கய்யா இவரும் போட வேண்டியதுதான் நீங்களும் நானும் ஒன்றுதான் எப்படி ஒன்றாக முடியும்.

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

(அது,) நீ அருள்புரிந்தவர்களுடைய பாதை. அவர்கள் (உன்னால்) கோபிக்கப்பட்டவர்களும் அல்லர். வழிகெட்டவர்களும் அல்லர். (அல்குர்ஆன் 1 : 7)

لَـكُمْ دِيْنُكُمْ وَلِىَ دِيْنِ

உங்கள் (வழிபாடுகளுக்குரிய) கூலி உங்களுக்குக் கிடைக்கும். இன்னும், எனது (வழிபாடுகளுக்குரிய) கூலி எனக்குக் கிடைக்கும். உன் இபாதத்து வேற ஏன் இபாதத்து வேற. (அல்குர்ஆன் 109 : 6)

قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَۙ

(நபியே!) கூறுவீராக: நிராகரிப்பாளர்களே! (அல்குர்ஆன் 109 : 1)

لَاۤ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَۙ

நீங்கள் வணங்குவதை நான் வணங்க மாட்டேன். (அல்குர்ஆன் 109 : 2)

நான் வணங்குற அல்லாஹ் வேற நீ வணங்குற மஃபூத் வேற,

وَلَاۤ اَنْـتُمْ عٰبِدُوْنَ مَاۤ اَعْبُدُ

இன்னும், நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குபவர்களாக இல்லை. (அல்குர்ஆன் 109 : 3)

وَلَاۤ اَنَا عَابِدٌ مَّا عَبَدْتُّمْۙ

இன்னும், நீங்கள் வணங்கியதை நான் வணங்குபவனாக இல்லை. (அல்குர்ஆன் 109 : 4)

**முஸ்லிம்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!**

وَ لَآ اَنْـتُمْ عٰبِدُوْنَ مَآ اَعْبُدُ

இன்னும், நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குபவர்களாக இல்லை. (அல்குர்ஆன் 109 : 5)

ஒற்றுமையாய் இருப்போம் உனக்கு நான் உதவி செய்வேன் ஆனா தீனால இரண்டு பேரும் சமமாக முடியாது உன் தீன் வேற என்னுடைய தீன் வேற உன் நம்பிக்கை வேற என்னுடைய நம்பிக்கை வேற நீ அண்டை வீட்டாண்ட என்னால உனக்கு எந்த தொந்தரவும் வராது.

لاَ يُؤْمِنُ» قِيلَ: وَمَنْ يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: الَّذِي لاَ يَأْمَنُ جَارُهُ بَوَايِقَهُ

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : புகாரி, எண் : 6016

உனக்கு நான் கெடுதி செய்ய மாட்டேன் நீ பசித்தால் உனக்கு நான் சாப்பாடு கொடுப்பேன் உனக்கு தாகமா இருந்தா நான் தண்ணி கொடுப்பேன் உனக்கு உதவினா நான் உதவி செய்வேன் ஆனா உன் தீனை என் தீனாக ஆக மாட்டேன் உன்னுடைய வணக்கஸ்தலத்தை என்னுடைய வணக்கஸ்தலத்தை ஆக்க மாட்டேன்.

சிந்திக்க முடியாது என்னால யோசிக்க முடியாது என்னால என்னுடைய உடலில் உடலுடைய ரோமங்களின் எண்ணிக்கையை அளவுக்கு எனக்கு உயிர் இருந்து இந்த ஈமானுக்காக தவ்ஹீதுக்காக நான் கொல்லப்பட்டாலும் உன்னுடைய வணக்கஸ்தலத்தை என்னுடைய வணக்கஸ்தலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

உன் மஃபூதுக்கு முன்னாடி குனிஞ்சு நிக்க முடியாது படிஞ்சு நிக்க முடியாது நான் படிந்து குனிந்து நிற்கிறது ரப்புல் ஆலமீன் அர்ஷுடைய அதிபதி அல்லாஹ்வுக்கு மட்டும்தான் நீ என்ன அரசியலை கொண்டுட்டு வர செத்தவருக்கு மாலை போட சொல்ற,

செத்தவங்களுக்கு மாலை போட்டு மரியாதை பண்ண சொல்ற அங்க போய் கும்பிட சொல்ற இங்கே பொய் அதை பண்ண சொல்ற அதுல போய் கலந்துக்க சொல்ற இதுல போய் கலந்துக்க சொல்ற இஸ்லாமை விட்டுட்டு எல்லாத்தையும் செய்ய சொல்ற புரியுதா நான் சொல்றது மாறுபடுபவர்கள் மாறுபடலாம் ஆனால் குர்ஆன் சொல்லிக் கொடுக்கக் கூடிய இஸ்லாம் இதுதான் புரியுதுங்களா.

அன்பிற்குரிய சகோதரர்களே திரும்ப நம்முடைய ஈமானை புதுப்பித்து நம்முடைய சமூகத்தை நம்முடைய குடும்பத்தை அல்லாஹ்வின் தீனின் படி கட்டி எழுப்ப வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம் இன்று இந்த ஒரு ஈமானுடைய பிரச்சாரம் விடுபட்ட காரணத்தால் நம்முடைய வாலிபர்கள் தன் வாழ்க்கையை எப்படி தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலேஜ்ல படிக்கிறவங்க பெண்களுக்கு பின்னாடி காதல் என்கிற பெயரில வேலை வெட்டி இல்லாத வாலிபர்கள் தெருகளிலே தெருக்களின் ஓரங்களிலே உட்கார்ந்து கொண்டு போதைப் பொருள்களுக்கு அடிமையாகி கொண்டிருக்கிறார்கள்.

அங்க வீட்ல ஒரு பெரியவங்க அத்தாவோ யாரோ பணம் கஷ்டப்பட்டு சம்பாதிச்சு இங்க அனுப்பிக்கிட்டு இருக்காங்க அதுல ஆடம்பரமான காரு ஆடம்பரமான பைக் வாங்கிகிட்டு ஊரை சுத்துறாங்க தொழுகை இல்லை இபாதத் இல்ல நல்ல நண்பர்களுடைய,

நட்பு வட்டாரம் பழக்க வழக்கம் இல்லை தொழுகையாளிகள் உடைய அந்த நட்பு இல்ல மஸ்ஜிதுடைய தொடர்பு இல்லை கடைசியில அற்ப வயசிலேயே தங்களுடைய வாழ்க்கையை தொலைத்து விட்டார்கள் அழித்துவிட்டார்கள் தங்களை தாங்களே நாசமாக்கி கொண்டார்கள்.

எவ்வளவு கேவலமா இருக்கு எவ்வளவு அநியாயமா இருக்கு ஒரு முஸ்லிம் வாலிபன் குடித்த நிலையிலேயே ஆக்ஸிடென்ட்ல மவுத்தா போறது, ஒரு முஸ்லிம் வாலிபன் தன்னுடைய வாகனத்தில் அதி வேகமாக சென்று முரட்டுத்தனமாக வாகனம் ஓட்டி தன்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வது குர்ஆன் என்ன சொல்லுது தெரியுமா?

وَاقْصِدْ فِي مَشْيِكَ

இன்னும், (விரைந்து செல்லாமலும் ஊர்ந்து செல்லாமலும்) உனது நடையில் நடுநிலைப் பேணு!
(அல்குர்ஆன் 31:19)

நடந்து போனா கூட அமைதியா அடக்கமா நடந்து போங்கன்னு குர்ஆன் சொல்லுது இவன் வண்டி ஓட்டுறான் பேய் வேகத்துல பிசாசு வேகத்துல ஷேக் உசைமின் சொல்றாங்க அதிகமான வேகத்தில் சென்று ஒருவன் விபத்தில் இறந்து விட்டால்.

அவன் தற்கொலை செய்தவனுக்கு சமமான என்கிறார்கள் யாருங்க இந்த காலத்துல இறந்து போன மிகப் பெரிய ஒரு மார்க்க சட்ட வல்லுநர் அவங்களுடைய ஃபத்துவா என்ன அதிவேகத்தில் சென்று விபத்தில் ஒருவன் இறந்து விட்டால் அவன் யாரு தற்கொலை செய்து கொண்டவனுக்கு சமம்.

அவனுக்கு பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை வைக்காதீங்க ஒரு நாலு பேரு மையத்தான் கொலைக்கு எடுத்துட்டு போயி தொழுக வச்சிக்கிட்டு வேணாம் அடக்கம் பண்ணி விட்டோம் அவனுக்கு ஜமாத்தா நீங்க தொழுவ வைக்காதீங்க அப்படிங்கறாங்க பாருங்கள் சகோதரர்களே,

அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக இப்படி இன்னொரு பக்கம் நம்முடைய பெண் பிள்ளைகளுடைய வாழ்க்கை பேஸ்புக்ல இன்ஸ்டாகிராமில் இன்னும் இன்னும் எத்தனை விஷயங்கள அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை தொலைத்து கொண்டு வருகிறார்கள் அல்லாஹ் நம்மளை பாதுகாக்கணும் ஆகவே அன்பிற்குரியவர்களே!

அல்லாஹ்வுடைய தீனை நாம் படிப்போமாக அந்த தீனின் பக்கம் நாம் வருவோமாக நாம் ஒவ்வொருவரும் இந்த தீனை ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக் கொள்வதற்கு தேவை உள்ளவர்களாக இருக்கிறோம் குர்ஆனோடு நம்முடைய உறவை புதுப்பித்துக் கொள்ள ரசூலுல்லாஹ் உடைய சுன்னாவோடு நம்முடைய உறவை புதுப்பித்துக் கொள்ள தேவை உள்ளவர்களாக இருக்கிறோம்.

அல்லாஹ்வின் மீது நமக்குள்ள ஈமானை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும் நம்முடைய யக்கினை அதிகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் அதற்காக அல்லாஹ்விடத்தில் துவா செய்ய

வேண்டும் சஹாபாக்கள் அப்படித்தான் அல்லாஹ்விடத்தில் துவா கேட்டார்கள் யா அல்லாஹ் தடுமாற்றம் இல்லாத

اللهم اني اسالك ايمانا لا..

தடுமாறாத ஈமானை கொடு அசைக்க முடியாத யகீனை கொடு என்று அல்லாஹ்விடத்திலே துவா செய்தார்கள் அது போன்று நாமும் அல்லாஹ்விடத்திலே துவா செய்வோமாக மார்க்கத்தை படிப்போமாக பரப்புவோமாக அல்லாஹ்வுடைய தக்வாவை வேண்டுவோமாக அல்லாஹ் சுபஹானஹூதஆலா எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வுடைய அச்சத்தை பயத்தை தருவானாக.

**ஆமீன்**

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்பு (1)**

صحيح البخاري(1/ 103)

477 - حَدَّثَنَا مُسَدَّدٌ، قَالَ: حَدَّثَنَا أَبُو مُعَاوِيَةَ، عَنِ الأَعْمَشِ، عَنْ أَبِي صَالِحٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " صَلاَةُ الجَمِيعِ تَزِيدُ عَلَى صَلاَتِهِ فِي بَيْتِهِ، وَصَلاَتِهِ فِي سُوقِهِ، خَمْسًا وَعِشْرِينَ دَرَجَةً، فَإِنَّ أَحَدَكُمْ إِذَا تَوَضَّأَ فَأَحْسَنَ، وَأَتَى المَسْجِدَ، لاَ يُرِيدُ إِلَّا الصَّلاَةَ، لَمْ يَخْطُ خَطْوَةً إِلَّا رَفَعَهُ اللَّهُ بِهَا دَرَجَةً، وَحَطَّ عَنْهُ خَطِيئَةً، حَتَّى يَدْخُلَ المَسْجِدَ، وَإِذَا دَخَلَ المَسْجِدَ، كَانَ فِي صَلاَةٍ مَا كَانَتْ تَحْبِسُهُ، وَتُصَلِّي - يَعْنِي عَلَيْهِ المَلاَئِكَةُ - مَا دَامَ فِي مَجْلِسِهِ الَّذِي يُصَلِّي فِيهِ: اللَّهُمَّ اغْفِرْ لَهُ، اللَّهُمَّ ارْحَمْهُ، مَا لَمْ يُحْدِثْ فِيهِ

**குறிப்பு (2)**

صحيح البخاري(4/ 35)

2892 - حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ مُنِيرٍ، سَمِعَ أَبَا النَّضْرِ، حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ دِينَارٍ، عَنْ أَبِي حَازِمٍ، عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ السَّاعِدِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «رِبَاطُ يَوْمٍ فِي سَبِيلِ اللَّهِ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا عَلَيْهَا، وَمَوْضِعُ سَوْطِ أَحَدِكُمْ مِنَ الجَنَّةِ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا عَلَيْهَا، وَالرَّوْحَةُ يَرُوحُهَا العَبْدُ فِي سَبِيلِ اللَّهِ، أَوِ الغَدْوَةُ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا عَلَيْهَا»

**குறிப்பு (3)**

(251) - 41حَدَّثَنَا يَحْيَى بْنُ أَيُّوبَ، وَقُتَيْبَةُ، وَابْنُ حُجْرٍ جَمِيعًا عَنْ إِسْمَاعِيلَ بْنِ جَعْفَرٍ - قَالَ ابْنُ أَيُّوبَ: حَدَّثَنَا إِسْمَاعِيلُ - أَخْبَرَنِي الْعَلَاءُ، عَنْ أَبِيهِ، عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «أَلَا أَدُلُّكُمْ عَلَى مَا يَمْحُو اللهُ بِهِ الْخَطَايَا، وَيَرْفَعُ بِهِ الدَّرَجَاتِ؟» قَالُوا بَلَى يَا رَسُولَ اللهِ قَالَ: «إِسْبَاغُ الْوُضُوءِ عَلَى الْمَكَارِهِ، وَكَثْرَةُ الْخُطَا إِلَى الْمَسَاجِدِ، وَانْتِظَارُ الصَّلَاةِ بَعْدَ الصَّلَاةِ، فَذَلِكُمُ الرِّبَاطُ«

**குறிப்பு (4)**

- (804) حَدَّثَنِي الْحَسَنُ بْنُ عَلِيٍّ الْحُلْوَانِيُّ، حَدَّثَنَا أَبُو تَوْبَةَ وَهُوَ الرَّبِيعُ بْنُ نَافِعٍ، حَدَّثَنَا مُعَاوِيَةُ يَعْنِي ابْنَ سَلَّامٍ، عَنْ زَيْدٍ، أَنَّهُ سَمِعَ أَبَا سَلَّامٍ، يَقُولُ: حَدَّثَنِي أَبُو أُمَامَةَ الْبَاهِلِيُّ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، يَقُولُ: «اقْرَءُوا الْقُرْآنَ فَإِنَّهُ يَأْتِي يَوْمَ الْقِيَامَةِ شَفِيعًا لِأَصْحَابِهِ، اقْرَءُوا الزَّهْرَاوَيْنِ الْبَقَرَةَ، وَسُورَةَ آلِ عِمْرَانَ، فَإِنَّهُمَا تَأْتِيَانِ يَوْمَ الْقِيَامَةِ كَأَنَّهُمَا غَمَامَتَانِ، أَوْ كَأَنَّهُمَا غَيَايَتَانِ، أَوْ كَأَنَّهُمَا فِرْقَانِ مِنْ طَيْرٍ صَوَافَّ، تُحَاجَّانِ عَنْ أَصْحَابِهِمَا، اقْرَءُوا سُورَةَ الْبَقَرَةِ، فَإِنَّ أَخْذَهَا بَرَكَةٌ، وَتَرْكَهَا حَسْرَةٌ، وَلَا تَسْتَطِيعُهَا الْبَطَلَةُ». قَالَ مُعَاوِيَةُ: بَلَغَنِي أَنَّ الْبَطَلَةَ: السَّحَرَةُ،.

**குறிப்பு (5)**

3453 - حَدَّثَنِي بِشْرُ بْنُ مُحَمَّدٍ، أَخْبَرَنَا عَبْدُ اللَّهِ، أَخْبَرَنِي مَعْمَرٌ، وَيُونُسُ، عَنِ الزُّهْرِيِّ، قَالَ: أَخْبَرَنِي عُبَيْدُ اللَّهِ بْنُ عَبْدِ اللَّهِ، أَنَّ عَائِشَةَ، وَابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمْ، قَالاَ: لَمَّا نَزَلَ بِرَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، طَفِقَ يَطْرَحُ خَمِيصَةً عَلَى وَجْهِهِ، فَإِذَا اغْتَمَّ كَشَفَهَا عَنْ وَجْهِهِ، فَقَالَ: وَهُوَ كَذَلِكَ: «لَعْنَةُ اللَّهِ عَلَى اليَهُودِ، وَالنَّصَارَى اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ» يُحَذِّرُ مَا صَنَعُوا


DARUL HUDA

211(102), FIRST FLOOR, LINGHI STREET, MANNADY, CHENNAI – 600001.

muftiomar@gmail.com, 044 2524 7866, 9840174121, 9884469044

Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi/

Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber

Website: http://www.darulhuda.net/